546

Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

30 JUL 19

பத்திராதிபர்: தி. ஆதிநயினர்.

புத்தகம் 5. } துந்துபிஞூ பங்குனிமீ 1923-ஞூ மார்ச்சுமீ { சஞ்சிகை 12.

விஷய சூசிகை.

	விஷயம்.		பக்கம்
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	...	265
2.	கோட்செவி குறளை காற்றுடனெருப்பு	...	266
3.	சூத்ர சூடாமணி	...	267
4.	நமது பெருங்குறை	...	279
5.	புதிய நாகரீகத்தின் முதிர்ந்த நிலை	...	282
6.	தருமசீலன் ஐந்தாவது ஆண்டு நிறைவு	...	284
7.	தருமசீலன் ஐந்தாம் வருடப் பூர்த்தியின் வாழ்த்து	...	284
8.	விநோதகதைத் திரட்டு	...	284
9.	தகவுரை	...	287
10.	தருமோபதேசம்	...	288

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0-2-0

DHAEMASEELAN PEESS. MADEAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும்சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.

26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

மகாகஷ்டமான சர்வமேகரோகங்களையும் போக்கி
இரத்தவிர்த்தியையும் தாது புஷ்டியையும்
தேகதிடத்தையும் தரத்தக்க

அமிர்தசஞ்சீ லேகியமும் ஸ்தம்பனதி செந்தூரமும்.

பால்ய சேஷ்டையாலும் அறிவீனத்தாலும் தீக்குணமுடையோர் சினேகத்தாலும் பற்பல தகாத செய்கைகளினாலும் விஷய இன்பத்தில் அளவுமீறி நடந்து, தேகமெலிந்து தாதுநீர்த்து இடுப்பு கைகால் முதலிய அவயவங்கள் பல ஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து கிழத்தன்மை யடைந்து, சோம்பல் நித்திராபங்கம், சதாகாலமும் சிற்றின்பத்தில் கவலை, மனோவேதனை முதலியவற்றிற்கு ஆளாகி நிற்கும் புருஷர்களுக்குச் சகல துர்க்குணங்களையும் போக்கிச் சுகத்தைத் தரக்கூடிய இன்ப அமிர்தங்கள் இவைகளே.

இவற்றுள் அமிர்தசஞ்சீவி லேகியத்தில், கல்நார் பஸ்பம், அயச்செந்தூரம், வங்கபஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, பொன் அம்பர், பாதம் பருப்பு, அக்ரோட்பருப்பு, சில்கூஜாப் பருப்பு, வெள்ளரி விதை, முள்ளங்கி விதை, நாயுருவி விதை, பூனைக்காலி விதை, இஸ்கூல் விதை, முதலியனவும், 96-வித கடைச்சரக்குகளும், சாலாமிஸ்றி, சப்பேத்மிஸ்றி, போஜிதான் மிஸ்றி, சுராஞ்சான் முதலிய பலவித் மிஸ்றிகளும், அரிய பல சிலாக்கிய மமைந்த சஞ்சீவிக்குச் சமானமான மலை மூலிகைகளின் சத்துக்களும், பசுநெய், மலைத் தேன், பசும்பால், முதலியவையும் அளவுக் கிரமப்படி சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்த இவ்வற்புத லேகியம் கைபாகம் செய்பாகந் தவறாமல் வெகு ருசிகரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கூறிய ஸ்தம்பனதி செந்தூரமும் சித்தர் முறைப்படி உயர்வாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகாரவிஷயத்தில் யாதொரு நிர்ப்பந்தமும் பத்தியமு மில்லாமலே, பலவித தேகஸ்திதி யுடையவர்களும் இந்தப் பரமசிரேஷ்டமான லேகிய பஸ்பங்களை எல்லாக்காலத்திலும், எல்லாத் தேசத்திலும் சந்தேகமின்றிச் சாப்பிடலாம்.

இவ்வளவு அருமையாகச் செய்து முடித்திருக்கும் இந்தக் குருமுறை லேகியத்தையும் செந்தூரத்தையும் ஒருமுறை 48-நாட்கள் ஒருவர் புசித்தால் அவரிடம் நபும்ஸகத்தன்மையிருந்தாலும் நீங்கிவிடும். துரிதஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம் இருக்குமிடம் தெரியாமல் ஓடிப்போம். ஆண் அங்கத்தின் சோர்வு அடியோடு நீங்கிவிடும். கை கால் அசதி, இடுப்புநோய், நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், தூர்த்தஸ்திரீகளின் சகவாசத்தினால் உண்டான வெள்ளை, கொருக்கு, மேகத்தடிப்பு, மேக ஊறல், மேகவெட்டை முதலிய பயங்கரமான ரோகங்களும் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறந்துபோம். இதற்குமுன் எப்போதும் உண்டாகாத அநேக அற்புதகுணங்கள் தோற்றும். இக்குணங்களை ஒரேமுறை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சுகானந்த வைத்திய சாலா,
நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழுநம்பிக்கை வைத்து ஒரேயொருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால் அவர்கள் அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்த லேகிய செந்தூரங்களினால் உண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின், இவற்றிற்கு மற்றவரிடம் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள் நேயர் முதலியோர்க்கு நீங்களே இவற்றின் சிறந்த குணத்தையும், நீங்கள் இவற்றாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக் கூறிச் சிபாரிசு செய்வீர்களென்பது நிச்சயம்.

நாம் இந்த அமிர்தசஞ்சீவி லேகிய செந்தூரங்களைப்பற்றி ஏன் இப்படிப் பன்னிப்பன்னிக் கூறுகிறோமென்றால் இவற்றின் குணங்கள் அவ்வளவு சிறந்தவை. இந்த லேகிய செந்தூரங்களை விசேஷமாய் நாம் கையாள ஆரம்பித்து ஏறக்குறைய 80-வருஷங்கள் ஆகின்றன. இது வரையில் இவற்றால் நமக்கு நல்லபெயரும் கீர்த்தியும் உண்டாய் வருவதோடு எண்ணிறந்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் கிடைத்து வருகின்றன. சிற்றின்ப சுகத்தை இஷ்டப்படி அனுபவிக்கும் ஆற்றலைத் தருவதில் முதன்மையானவை இந்த லேகியசெந்தூரங்களே யென்று எமது அனுபவத்தில் கண்டு தீர்மானித்திருக்கிறோம்.

1-மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய செட் 2-க்கு ரூ. 6 0 0

½-மண்டலம் 24-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய செட் 1-க்கு ரூ. 4 0 0

சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2 முதல் 5 வரையில் தேக திடமறிந்து மாத்திரைகளை எடுத்துச் சாப்பிட்டுக் கொஞ்சம் ஜலம் சாப்பிடவேண்டியது. இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய்ப் பேதியாகிவிடும். உடனே மிளகு நீர்ச்சாதம் குப்புசாதம் அல்லது காப்பி ஆப்பம் ரொட்டி இவைகளைச் சாப்பிடலாம். இம்மாத்திரையைச் சிறு குழந்தைகளுக்கு 1-மாத்திரை முதல் தேகதிடமறிந்து பிள்ளைப்பாலில் உபயோகிக்கலாம். வாய்கசப்புகுமட்டல் நெஞ்சுகாகாரப்பு வயிற்றுவலி முதலிய கெட்ட குணமில்லாத பேதி மாத்திரை இது என்று தெரிந்துகொள்ளவும். மாத்திரை அனுப்பும்பொழுது அதை உபயோகிக்கவேண்டிய விபரமும் தெரிவிக்கப்படும்.

25-மாத்திரை அடங்கிய புட்டி அணா 4

கல்நார் பல்பொடி

இந்தப் பொடியிற் கொஞ்சமெடுத்துக் காலையில் பல்துலக்கி வந்தால் இது, வாய் நாற்றத்தைப்போக்கி பல்லினின்று இரத்தம் வருதல், சீழ்வருதல் முதலியவைகளைப் போக்கி ஈறுவளருதலைக் கரைத்துப் பல் ஜிலுஜிலுப்பு முதலிய சகலவித தந்தரோகங்கள் யாவையும் ஆச்சரியகரமாய் கண்டிக்கும். பற்களை அதிக பலப்படுத்தும் குணமும் உண்டு. பத்தியம் கிடையாது.

ஒரு டப்பியின் விலை அணா 4

சுகானந்த வைத்தியசாலா,

நெ. 26, ஆச்சாரப்பன் வீதி, ஜி. டி. சென்னை.

உயர்ந்த எலக்டிரிக் தங்கநகைகள்.

எலக்டிரிக் புதுச்சேரி அட்டிகையும் பதக்கமும்.

இது, சாதாரணமாய் பெண்கள் கழுத்தில் அணிந்துகொள்ளக்கூடியது. சுத்தமாகவும் இருக்கும்.

டிக்கா பதக்கத்துடன் புதுச்சேரி மோஸ்தரு கிள்ளட்டிகை 1-க்கு விலை ரூபா 3 6 0

டிக்கா பதக்கம் இல்லாமல் சரமோத்திரம் விலை ரூபா 1 12 0

தனிப்பதக்கம் 1 12 0

ஐந்துசிரசுள்ள சலங்கைகட்டிய ஜடைநாகர்.

ஜர்மன் கோள்டினால் செய்து தங்க கிலிட் கொடுத்தது.
1-க்கு விலை ரூபா 2 12 0

இமிடேஷன் வைர கம்மல்கள்.

இவற்றைப் பார்ப்பவர்கள் ரவைகளென்றே சொல்லுவார்கள். இவற்றை அனைவரும் வாங்கி வருகின்றார்கள். இவற்றின் கற்கள் சூரியப்பிரகாசத்திற் கொப்பான பளபளப்பும் ஜொலிப்புமுள்ளவை. இவை சவரம் பொன்னிற்கு நிகரான ஓர்வித உலோகத்தினால் கட்டப்பட்டவை. கட்டடம் எப்பொழுதும் பொன்னைப்போலவே இருக்கும். இக்கற்களின் நிறம் எப்பொழுதும் மாறுவது கிடையாது. இந்தக் கற்களில் அநேகவித நகைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றின் விபரம் அடியில் பார்க்கவும். இவைகளை முன்னிட்டு வாங்கினவர்களிடம் பார்க்கும் ஒவ்வொருவரும் கட்டாயமாய் வாங்குவார்கள்.

வெள்ளைக்கம்மல் பெரிய சைஸ் ஜதை 1-க்கு ரூபா	2	4	0
வெள்ளைக் கம்மல் சிறியது ஜதை 1-க்கு	2	0	0
சிவப்புகம்மல் பெரிய சைஸ் ஜதை 1-க்கு	2	8	0
சுற்றி சிவப்பு நடுவில் வெள்ளை ஜதை 1-க்கு	2	8	0
ஒருகல் திருகாணி கடுக்கன் ஜதை ரூபா	1	0	0
குருட்டுபாவலி ஜதை 1-க்கு ரூபா	2	0	0
மூக்குத்தி 1-க்கு விலை அணா	0	6	0

ரோஜாப்பூ சாமந்திப்பூ.



பருவ மங்கையர்கள் தலையில் அணிந்துகொள்ள மிகவும் அழகான ரோஜாப்பூ, சாமந்திப்பூ இரண்டு தினுசும் உள்ளன சிறுபெண்கள் முதல் பெரிய ஸ்திரீகளும் கொண்டைத் திருகுபோல் தலையில் அணிந்துகொள்ளலாம்.

ரோஜாப்பூ விலை அணா 14 சாமந்திப்பூ விலை அணா 14

ஆதிலக்ஷமி அண்கோ,

1 பாலகிருஷ்ணன் லேன், ஆச்சாரப்பன் வீதி, ஜி. டி. சென்னை.

ஸ்ரீபாலன்.

ஓர் இனிய தமிழ் நாவல்.

இஃது, ஸ்ரீபுராணத்தினின்றும் எடுத்து இனிய தமிழ் நடையில் ஆடவர், பெண்டிர், முதலியவர்கள் விரும்பி வாசிக்கத் தக்க விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நாவலை வாசிப்பதால் கற்பின் மகிமை, சத்புருஷர்களின் லக்ஷணம், நட்பின் உயர்வு, சிநேகத்துரோகிகள் தீங்கடைதல், வஞ்சனைக்காரர்கள் சஞ்சலப்படல், பொறுத்தார் அரசாளுதல், பொங்கினர் காடுறைதல், வேட்டகம் புகுவாருக் குண்டாம் இழிவு, முயற்சி திருவினை யாக்குதல், இன்னாரை யொறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் முதலிய பல அரிய நீதிகளை யெல்லாம் நன்குணரலாம். சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத் தான் புத்தகம் கிடைக்கும். இதன் விலை அணா 10.

மலையை விழுங்கிய மகாதேவன் கதை.

இது, அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க அரிய தமிழ்க்கதை. "மலையை விழுங்கிய மகாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளமாம்" என்ற பழமொழிக்கிணங்க இதில் மகாதேவன் என்னும், 'சண்டப்பிரசண்ட யுகசண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திடீர்ப்புளுக ஜெகஜாலப்புரட்டன் செய்யும் பகல்மோசம், இராமோசம், மதிமோசம், சதிமோசம் முதலிய பல ஏமாற்றுச் செய்கைகளெல்லாம் மிக்க அற்புதமாயிருக்கும். இக்கதையால் முக்கியமாக நல்ல விவேகமுண்டாகும். இதன் விலை அணா 6.

உதயணன்.

இது, சிறு பஞ்ச காவியங்களிலொன்றாய்ச் செய்யுள் ரூபமாக இருந்த உதயண காவியத்தைத் தழுவி வசன நடையில் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது; இதில் பல நீதிகள் அடங்கியுள்ளன. இந்நூலை வாசிப்பதால் உதயண காவியத்தை ஒருமுறை பாடங்கேட்டது போலாகும்; இந்நூல் வாசிப்போர்க்கு மிக்க இன்பத்தை யளிக்கும்; ஆடவரும் பெண்டிரும் விரும்பி வாசிக்கத் தக்கது. இதில் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத் தான் புத்தகம் கிடைக்கும். இதன் விலை அணா 8.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

கனவான்களே!

கலியாணத்தில் தாலிகட்டுவதைக்கூட மறந்து விடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. இக்கதை முழுவதையும் படித்துப் பார்த்தால் தாலிகட்ட மறந்துவிடுவதற் கேற்பட்ட காரணங்களும், இன்னும் பல விஷயங்களும் மிக வேடிக்கையாய் விடாநகைப்பை யுண்டாக்கும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் படித்தாலும் அடங்காச் சிரிப்பேயுண்டாகும்.

இப்புத்தகம் விலை அணா 5.

தர்மசீலன் புக்டிபோ,
ஆச்சாரப்பன் வீதி, ஜி. டி. சென்னை.

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

910448

புத்தகம் 5	துந்துபி௵ பங்குனி௴ 1923௵ மார்ச்சு௴	சஞ்சிகை. 12

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

சுவர்க்கபதவியையும் மோக்ஷத்தையும் கொடுக்கும் நிலை.

"ஒன்றாய வூக்கவேர் பூட்டி யாக்கைச் செறுவுழுது
நன்றாய நல்விரதச் செந்நெல்வித்தி யொழுக்கநீர்
குன்றாமற் றாங்கொடுத் தைம்பொறியின் வேலிகாத் தோம்பின்
வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும்விண் ணோ றுலகின்றே"

(இ-ள்.) "ஒருதன்மைத்தாகிய முயற்சியென்னும் ஏரைப்பூட்டி, உடம்பாகிய செய்யை உழுது (அதாவது, தவத்தாலே வருந்துவித்து) நன்மையாகிய சிறந்த விரதமென்னும் செந்நெல்லை விதைத்து, நல்லொழுக்கமாகிய நீரை வற்றாமற் பாய்ச்சி, பொறிகளாகிய வேலியைப்புலன்களாகிய பசுக்கள் பிரியாதபடி காத்துக்குணமாக்கினால், அந்நிலையானது, முதலில் சுவர்க்கத்தைத்தந்து, பின்னர், வினைகளை வென்றவராகிய சித்தபரமேஷ்டிகளுடைய மோக்ஷ இன்பத்தையும் உண்டாக்கும்" என்பதாம்.

(வி-ரை.) மனத்தை ஒரு நிலையில் வைத்துச் செய்யப்படும் ஊக்கமே பயன் தருமாதலின், 'ஒன்றாயவூக்கம்' எனப்பட்டது. இதுவே தவத்தை நிறைவேற்றி வைக்கக்கூடியதாதலின், ஏராக உருவகிக்கப்பட்டது. உடம்பே தவத்தை நடத்துதற்கு இடமாதலின் வயலாக உருவகம் செய்யப்பட்டது. உடம்பை வாட்டுதலே தவமாதலின், அஃதுழவெனக் கூறப்பட்டது. தவத்தில் உற்பத்தியாவது விரதமாதலின் அது, வித்தெனக் கூறப்பட்டது. இந்த விரதம் ஒழுக்கத்தாலேயே வளர்வதாதலின், அது நீராக உருவகிக்கப்பட்டது. இங்ஙனம் வளர்க்கப்படும் விரதத்தை நிலைக்கச்செய்வது பொறிபுலன்களை யடக்குதலாம். ஆகலின், பொறிவேலியாகக் கூறப்பட்டது. புலன்கள் கெட்டவழியிற் சென்றால் அவற்றின் வழியே பொறிகளையும் இழுத்து விரதத்தைக் கெடுத்துவிடும், புலன் அடங்கினால் பொறியும் அடங்கும். இம்முறையே பாதுகாத்துச் செய்தவரின் அவ்விரத நிலையானது, முறையே சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையுந் தரும்; இவை அதன் விளைவு. ஊக்கத்தோடு தவஞ்செய்து உடம்பை வாட்டி விரதத்தை ஒழுக்கத்தால் வளர்த்து ஐம்பொறிகளை யடக்கினால் சுவர்க்கமும் மோக்ஷமும் முறையே கைகூடுமென்பது இதன் திரண்ட கருத்து. தாம்-அசை. இன்-சாரியை. ஓம்பல்-குணமாக்கல். நன்றாய என்பது விரதத்தின் பயனை உணர்த்தி நின்றது; நல் என்பது அதன் சிறப்பை யுணர்த்தவந்த அடை. வென்றார்-சித்தபரமேஷ்டிகள்.

(சீவகசிந்தாமணி. 962)

தருமசீலன்.

துந்துபிஹூ பங்குனிமீ.

"கோட்செவிகுறளை காற்றுடனெருப்பு."

இதன் பொருள்:—கோள்செவி-கோளைக்கேட்கும் செவியையுடையவனும், குறளை-கோளைச் சொல்லுவோனும், (சேர்ந்திருப்பது), காற்றுடன்-காற்றுடனே, நெருப்பு-நெருப்புச் சேர்ந்திருப்பதாம்" என்பதாம்.

நெருப்பு சிறிதாக அடங்கி யிருக்கும்போதும் நெருங்கியவற்றை அழிக்கும் இயற்கை யுடையது. இப்பேர்ப்பட்ட நெருப்புடன் காற்றுச்சேர்ந்து விட்டாலோ அஃததிகரித்து ஓர் ஊர் முழுவதையுமே அழித்துவிடும். இதேபோல் ஓர் அரசனோ, பிரபுவோ, பிறர் சொல்லும் கோள்மொழிகளைக் கேட்கக்கூடியவனு யிருந்தால் அவன் அறிவில்லாதவனு யிருப்பான்; அதனால் அவனை நெருங்கி யிருப்பவர்களுக்கெல்லாம் தீங்கே உண்டாகிக் கொண்டிருக்கும். அப்படி யிருப்பவனிடம், ஒருவர் செய்யாத குற்றத்தைச் செய்ததாகப் பொய்கூறும் இயற்கையுள்ள கோட்காரனொருவன் சேர்ந்துவிட்டால் அங்குள்ளவர்கள் மேலெல்லாம் எப்பொழுதும் கோளையே சொல்லிக் கொண்டிருப்பான். அந்தக் கோளைக்கேட்டு அப்பிரபு அடுத்திருப்பவர்க்கு அளவற்ற தீங்குகளைச் செய்து வருவான்.

இதேபோல் இக்காலத்தில் அநேகம் சமஸ்தானங்களில் சில இந்திரஜாலப் புரட்டுக்காரர்கள், தாங்களே குலத்திலும் நலத்திலும் முதன்மை பெற்றவர்களென நடித்துச் சேர்ந்துகொண்டு ஆங்காங்குள்ள பிரபுக்களைத் தம் வசப்படுத்திப் பிறர்மீது அளவற்ற பொய்களைக் கூறி அவர்களைக் கெடுத்துத் தாங்கள் மாத்திரம் சுயநலம் பெற்று வாழ்வதைக் காணலாம். இவர்கள் நரகத்துக்கே ஆளாவார்கள். இவர் கோளுக்குச் செவிசாய்க்கும் இயல்பினரும் அபகீர்த்திக்கே ஆளாவார்கள். ஆதலின், இச்செய்கை கூடாதென்பதை விளக்கற் பொருட்டே ஔவையார் இச்சூத்திரத்தால் இதனையுடையாரின் தீமையை மட்டும் உவமை முகத்தால் கூறினர். இதனால் ஒவ்வொருவரும் கோட்சொல்வதும், அதனைக் கேட்பதும் கூடாவென்பதை உணர்ந்து கொள்க.

கோட்செவி குறளை யென்பன ஆகுபெயர்களாய் அவற்றையுடையாரை உணர்த்தி நின்றன.

(திருவருட்சகாயம்.)

"க்ஷத்ர சூடாமணி."

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-11-பக்கம்-250)

(இலக்ஷணையாரிலம்பகம்.)

'ஜீவகன்' "விதேஹ" நாட்டிற்குச் சென்றதும் அவன் மாமனாகிய கோவிந்தராஜன் அவனையும் அவன் தோழர்களையும் தக்கபடி உபசரித்தான். பின்பு ஜீவகன், அவன் தோழர்கள், மந்திரிகள் கோவிந்தராஜன் முதலியோர் ஒன்று சேர்ந்து 'காஷ்டாங்கார' னோடு போர்புரிவதற்குரிய விஷயங்களைக் குறித்து யோசித்து முடிவு செய்தனர். கோவிந்தராஜனும் 'காஷ்டாங்கார' னோடு தாமதமின்றிப் போர்புரிந்து இராஜ்யத்தை 'ஜீவக'னுக்கு வசமாக்கவேண்டுமென்று தீர்மானித்தான். அப்பொழுது 'காஷ்டாங்காரன்' அவனுக்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தை 'விருச்சிக' னென்ற மந்திரி பிரித்து வாசித்தான். அதனில்—

"காஷ்டாங்காரன்" விதேஹ நாட்டு மன்னவருக்கு எழுதியது; 'ஸத்யந்தர' வேந்தனை நான் கொன்றதாய் என்மீது ஒரு பொய்ப்பழி நகரமெங்கும் பரவியிருக்கின்றது. இதைப்பலர் உண்மையென்றே நம்பி யிருக்கின்றனர். உண்மையை அறிவதில் திறமையுள்ள நீ இதை மெய்யென்று நம்பமாட்டாய். நடந்த விஷயம் என்னவென்றால், 'அசனிவேகம்' என்னும் பட்டத்து யானை ஒரு நாள் மதவெறிகொண்டு தேர்களையும் குதிரைகளையும் வீரர்களையும் வதைக்கத் தொடங்கிற்று. அதனால் அரசன் அதை அடக்கும்படி யானைப்பாகர்களை அனுப்பினான். அவர்களையும் அது அழித்துவிட்டது. பின்பு அரசன்தானே அதை அடக்கிக் கட்டுத்தறியில் கட்ட முயற்சித்தான். உடனே அவ்வேழம் அரசனைத் துதிக்கையால் பற்றியிழுத்துக் காலின் கீழ்போட்டு மிதித்துக்கொன்றுவிட்டது. அதனால் அவருடைய அரசை நான் ஏற்கநேர்ந்தது. தான் அண்டியிருக்கும் மரத்தை வெட்டுபவனும் உண்டோ? உலகம் பலவிதம்; ஊரார் வாயை மூடலாகுமோ? இனி இவ்வரசாட்சியைத் தாங்களே ஏற்றுக்கொண்டு, எனக்கு நேர்ந்திருக்கும் பெரும்பழியை நீக்கி வைக்கவேண்டும், இப்பேருதவியை நான் என்றும் மறவேன்."

இராஜமாபுரம் | இங்ஙனம்:
தங்கள் ஊழியன்
"காஷ்டாங்காரன்." என்று

எழுதப்பட்டிருந்தது.

இதைக் கேட்டதும் 'சீவகன்' முதலியோர் "காஷ்டாங்கார" னுடைய கபட எண்ணத்தைக் குறித்து நகைக்கலாயினர். அப்பொழுது கோவிந்தராஜன் "காஷ்டாங்காரன் நம்மை வஞ்சமாய்க்கொல்ல நினைத்திருக்கிறான். இதை உதவியாகக்கொண்டே நாமும் அவனைக்கொல்ல முயலவேண்டும். இதன் பொருட்டு நாம் காஷ்டாங்காரனுடன் பகையையொழித்து நட்புக்கொண்டதாக முதலில் பிரசித்தப்படுத்திப் பின்பு நமது படைகளை ஒன்று சேரும்படி

பறையறைவிக்க வேண்டும்" என்றான். மற்றவர்களும் அதுவே சரி யென்றனர். உடனே மந்திரி "நமது அரசர் 'காஷ்டாங்கார' னுடன் நட்புரிமை பூண்டார்; ஆதலால், நமது நாட்டுக்குடிகளனைவரும் எங்கும் அலங்கரித்து உற்சவம் கொண்டாட வேண்டியது" என்று பறையறையும்படி, வள்ளுவருக்கு உத்தரவளித்தான். உடனே வள்ளுவர் யானைமேலேறி நகரமெங்கும் பறையறைந்தனர். இதைக்கேட்ட ஜனங்கள் மகிழ்ச்சியடைந்து உற்சவம் கொண்டாடினர்.—'காஷ்டாங்கார' னும் ஒற்றர்மூலம் இவ்விஷயத்தை யறிந்து சந்தோஷமடைந்தான். பின்பு மந்திரியின் கட்டளையின் பேரில் வள்ளுவர் "நமது மன்னவர் இராஜமாபுரம் போகக் கருதியிருப்பதால், நமது வீரர்கள் யாவரும் ஆயுதங்களோடும் நால் வகைச் சேனைகளோடும நமது கோட்டைக்குவந்து சேரவேண்டும்" என்று மீண்டும் பறையறைந்தனர். உடனே வீரர்கள் யாவரும் அவ்வாறே அரசன் கோட்டைக்கு வந்தனர்.

பின்னர் கோவிந்தராஜன் ஓர் சுபலக்னத்தில் தானங்களைச் செய்துவிட்டு ஜீவகனுடனும் தனது சேனைகளுடனும் இராஜமாபுரம் போய்ச்சேர்ந்தான். அவன் வந்திருப்பதையறிந்து காஷ்டாங்காரன் மகிழ்ந்தான். உடனே காஷ்டாங்காரன் சில குதிரைகளையும் வீரர்களையும் மோகராக்களையும் கோவிந்தராஜனிடம் காணிக்கையாக அனுப்பினான். கோவிந்தராஜனும் அவனுக்குப் பிரதிகாணிக்கை அனுப்பினான்.

கோவிந்தராஜனும் காஷ்டாங்காரனைக் கொல்ல எண்ணியிருந்தான். அதனால், அவன் "அழற்கொள்ளி வட்டம்" என்ற சுழல் யந்திரம் ஒன்றை அமைத்தான். அதில் மூன்று பன்றிகள் இருந்தன. அவை ஒன்றைவிட்டு ஒன்று மாறிமாறிப் பிரிந்தும், மீண்டும் ஒன்று சேர்ந்தும் மீண்டும் பிரிந்தும் சுழன்றுபோகும். அந்த எந்திரத்தின் அடியில் வட்டமான சக்கரமொன்று அதிவேகமாய்ச் சுழன்று கொண்டிருந்தது. அப்பொழுது கோவிந்தராஜன் "நான் ஏற்படுத்தியிருக்கும் யந்திரத்தின் அடியில் சுழன்று கொண்டிருக்கும் சக்கரத்தின் மேலேறி, அதன்மேல் சுழன்று கொண்டிருக்கும் மூன்று பன்றிகளையும் எவன் ஒரே அம்பால் அறுத்து வீழ்த்துகின்றானோ, அவனுக்கே என் புத்திரியாகிய இலக்ஷணையை விவாகஞ் செய்துகொடுப்பேன்" என்று பறையறைவித்தான்.

இதைக்கேட்ட பல அரசர்கள் இலக்ஷணையை மணக்கவிரும்பி அங்கே வந்து கூடினர். சிலர் அந்த இயந்திர அமைப்பையும் அதிற்சுழலும் பன்றிகளையும் பார்த்துவிட்டு "இப்பன்றிகளை ஓரம்பால் வீழ்த்துவது இயலாத காரியம்" என்று திரும்பிச்சென்றனர். வேறு சிலர் அம்புகளை எய்தனர். அவை குறிதவறி ஆகாயத்திற்சென்றன. மற்றும் சிலர் எய்த அம்புகள் ஒரேபன்றியை அடித்தன. அவர்களில் ஒருவராலும் அம் மூன்றுபன்றிகளையும் வீழ்த்த முடியவில்லை. உடனே சீவகன் யந்திரத்தின் சமீபம்போய் அப்பன்றிகள் மூன்றும் ஒன்று சேருவதை உற்றுநோக்கிச் சுழலும் சக்கரத்தின்மேலேறி ஓரம்பைஎய்தான். உடனே அப்பன்றிகள் மூன்றும் கீழேவீழ்ந்தன. அப்பொழுது கோவிந்தராஜன் ஜீவகனது பிறப்புண்மையை அனைவருக்கும் அறி

வித்து, பன்றிகளை வீழ்த்தியவனே 'சீவக'னென்றும் தெரிவித்தான். அதைக் கேட்டு அரசர்கள் மகிழ்ச்சி யடைந்தனர்.

ஜீவகனைக் கண்டதும் 'காஷ்டாங்காரன்' சிங்கத்தைக்கண்ட வேழம் போல் நடுங்கி, "ஐயோ! இவனைக் கொன்றுவிட்டதாக 'மதனன்' என்னிடம் கூறினனே! அவன் பொய்சொல்லி என்னை ஏமாற்றிவிட்டானே! இனிநான் தப்புவதெப்படி? சீவகன் சுத்தவீரனல்லவா? அவனை வெல்லுவது யாரா லாகும்? தப்பெண்ணங் கொண்ட அவன் மாமனையும் நான் இங்கே வரும்படி அழைத்து மோசம் போனேன்; அது என்னுடைய நாசத்தின்பொருட்டுப் பிசாசை ஏவிக்கொண்டதுபோ லிருக்கிறது. அந்தோ! "ஒன்றை நினைக்கின், அது வொழிந்திட் டொன்றாகும்" என்பது என் விஷயத்தில் உண்மையாயிற்றே! நெருப்புக்குக் காற்றும் சேர்ந்ததுபோல், ஜீவகனுக்கு கோவிந்தராஜனும் துணையாகப் படையுடன் வந்திருக்கிறானே! இனி என்ன செய்வேன்?" என்றெண்ணி வருந்திச் சோர்வடைந்திருந்தான்.

அப்பொழுது 'பத்மமுகன்' முதலிய ஜீவகன் தோழர்கள் குதிரைமீதேறி 'காஷ்டாங்கார'னுக் கெதிரே சென்று, "அடே! நன்றிகொன்ற பாதகா! இனியேனும் ஜீவகனிடம் அரசாட்சியை ஒப்புவித்துவிடு; இன்றேல், போருக்குவா!" என்று அதட்டிச் சொல்லினர். உடனே அவன் "ஏ துஷ்டர்களே! என்ன சொன்னீர்கள்? என் வீரத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்; உங்களையும் ஜீவகனையும் கோவிந்தராஜனையும் இதோ கொன்று நான் வெற்றிமாலை சூடுகிறேன், பாருங்கள்" என்று சொல்லி, நால்வகைச் சேனைகளையும் கூட்டிப் போருக்கு யத்தனித்தான்.

உடனே இருபடைகளுக்கும் போர் மூண்டது; பல வீரர்களின் தலைகள் அறுபட்டுக் கீழே வீழ்ந்தன. மதனன் ஆத்திரத்துடன் விஜயனை எதிர்த்து வந்தான். உடனே அவன் தன்வாளால் அவனை வெட்டி வீழ்த்தினன். புத்திஸேனன் தன்னை யெதிர்த்த பல வீரர்களைக் கொன்றான். காஷ்டாங்காரன்-சேனாபதி சிறிது நேரம் போர்புரிந்து உயிர் துறந்தான். பின்பு ஜீவகன் வில்லை வளைத்துக் கணக்கற்ற அம்புகளைப் பகைவர்மேல் எய்தான். அதனால் பல வீரர் இறந்தனர். அதனால் பகைவர் படை சிதறுண்டது. அதைக்கண்டு கோபித்த 'காஷ்டாங்காரன்' மிக்க ஆத்திரத்துடன் தன் உடைவாளை உருவிக்கொண்டு ஜீவகன் தேர்மேல் பாய்ந்தான். உடனே சீவகன் அவன் மேல் ஓர் கூரிய அம்பைத் தொடுத்து அவனைப் பூமியில் வீழ்த்திவிட்டான்.

பின்பு சீவகனுடைய கட்டளையின்பேரில் "காஷ்டாங்காரன் இறந்துவிட்டான்; இனி இத்துடன் யுத்தம் நிற்கட்டும்" என்று பறைசாற்றப்பட்டது. இதைக் கேட்டு சீவகன் சேனைகள் ஆரவாரஞ் செய்தன. இராஜமாபுரத்திலுள்ளவர் யாவரும் சந்தோஷ மடைந்தனர். மண்மகளும் சீவகனுக்கு ஸ்வாதீனமானாள். அப்பொழுது கோவிந்தராஜனும் "விஜயை இப்பொழுது வீரன் தாய் ஆயினள்; என் பெண்ணும் வீரனைக் கணவனாகப் பெற்றாள்." என்று சொல்லி சீவகனைக் கொண்டாடினன். சிற்றரசர்கள் யாவரும் சீவகனைச் சேவிக்கலாயினர்.

பின்னர் ஜீவகன் தனது நண்பர்களுடன் அரண்மனையில் புகுந்தான். மறுநாள் ஜீவகனுக்கு முடிசூட்டக்கருதி அவன் உறவினரும் புரோகிதரும் மந்திரிகளும் வந்து கூடினர். அப்பொழுது கந்தருவனும் பாற்குடங்களுடன் அங்குவந்து தோன்றினன். பின்பு கந்தருவனும் கோவிந்தராஜனும் ஜீவகனுக்குப் பாலால் அபிஷேகஞ் செய்துவைத்து, சுப முகூர்த்தத்தில் பலவகை வாத்தியங்களும் வேத கோஷங்களும் முழங்க முடி சூட்டினர். பின்பு கந்தருவன் தன்னிருப்பிடஞ் சென்றான். உடனே ஜீவகன் சிம்மாஸனத்தில் வீற்றிருந்து குடிகள் யாவருக்கும் வேண்டிய பொருள்களைப் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கும்படி கட்டளை யிட்டான். காராகிருகத்திலுள்ளவர்களை உடனே விடுதலைசெய்தான். பிறகு ஜீவகன் அரசாட்சியை நடத்தி மகிழ்ந்திருந்தான்.

அப்பொழுது அந்நாட்டிலுள்ள குடிகள், "ஜீவகன் இராஜ குமாரனாக ஜனித்ததென்ன! சுடலையில் பிறந்ததென்ன! மீண்டும் இழந்த அரசாட்சியைப் பெற்றதென்ன! கர்மங்களின் வைசித்ர்யத்தை அறிந்தவர் யார்? சுகதுக்கங்களுக்குக் காரணம் புண்ணிய பாவங்களே யாகும். சிலந்திப் பூச்சியின் நூல்கள் கிணற்றில் விழுவோரைத் தடுக்குமோ? சீவகன் தன்னைக்கொல்ல விரும்பிய 'காஷ்டாங்கார'னைக் கொன்று அரசாட்சியைப் பெற்றான். யாவும் விதியின் செயலே; விதியைவெல்ல எவராலும் இயலாது. காஷ்டாங்காரன் பேராசைகொண்டு அரசனை எமாற்றினன். அதனால் அவன் அழிந்தான். கேடுநினைப்பான் கெடுவானன்றோ? கந்தருவன் தனக்கு ஜீவகன் கணப்பொழுது உபகரித்ததையுன்னி, அவனுக்குப் பிராணதானம் செய்தான். காஷ்டாங்காரனோ தன்னை உயர்பதவியில் வைத்ததற்குப் பிரதியாக அரசனையே கொன்றான். குணத்தை மாற்ற வியலாது. நல்லோர் உபகாரஞ் செய்தாலும் அபகாரஞ் செய்தாலும் பேதமடையார். 'சுடினும் செம்பொன் தன்னொளி கெடாதன்றோ?" என்று பேசிக்கொண்டனர். பின்பு ஜீவகன் அரண்மனையிலிருப்பதால் 'காஷ்டாங்காரன் உறவினராகிய பெண்மக்கள் ஜீவகனால் தங்களுக்குத் தீங்கு நேரிடுமோவென்று நடுங்கினர். அதையறிந்த ஜீவகன் "மாதர்காள்! நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். காஷ்டாங்காரன் எனக்குப் பகைவனேயொழிய நீங்கள் எனக்கு விரோதிகளல்ல; அவன் கொடுத்த பொருள்களை நானும் தருகிறேன். அவற்றைக்கொண்டு நீங்கள் இங்கேயே வசித்துக்கொண்டிருங்கள்" என்றான். அவர்களும் அதற்குச் சம்மதித்து அங்கேயே வசித்தனர்.

பின்னர் ஜீவகன் வெவ்வேறிடங்களிலிருந்த மனைவியர் எழுபேர்களையும் தன் அரண்மனைக்கு வர வழைத்தான். அவர்கள் ஜீவகன் பிரிவால் வருந்திக் கிடந்தவர்களாகையால், ஜீவகனைக் கண்டதும் அளவற்ற சந்தோஷமடைந்தனர். பின்பு அங்குள்ள பெரியோர்கள் ஜீவகனுக்கு இலக்ஷணையை விவாகம்புரிந்து வைக்கக்கருதி ஓர் முகூர்த்தம் நிச்சயித்தனர். முகூர்த்தத்திற்கு ஒருவாரம் முந்தியே சகல ராஜாக்களுக்கும் மணவோலை அனுப்பப்பட்டது. நாடெங்கும் அலங்கரிக்கப்பட்டது. குறித்தநாளில் அரண்மனையில் மந்திரிகள், சிற்றரசர்கள், சேனாபதிகள், புரோகிதர் முதலியோர்

வந்து சேர்ந்தனர். சீவகனும் இலக்ஷணையும் மங்கள ஸ்நானஞ்செய்து ஆடையா பரணங்களால் அலங்கரித்துக் கொண்டு மணமேடையில் அமர்ந்தனர். வேத வேதியர்கள் மந்திரங்களை ஜெபித்து ஹோமஞ்செய்தனர். பலவித வாத்தியங் கள் சப்தித்தன. பின்பு சுபமுகூர்த்தத்தில் கோவிந்தன் தன் புதல்வியாகிய இலக்ஷணையை சீவகனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். விவாகம் விதிப் படி நிறைவேறிற்று. அன்றுயாவரும் ஆடல், பாடல்களில் வினோதமாய்க் காலங்கழித்தனர்.

விவாகம் முடிந்தபின் ஜீவகன் அருக்கதேவனைத் தொழுது சிங்காதனத்தி லமர்ந்து செங்கோல் செலுத்தலானான். அவன் பதினான்கு வருஷங்கள்வரை யில் குடிகள் பகுதிப்பணம் கட்டவேண்டிய தில்லையென்று ஆக்ஞாபித்தான். பின்பு அவன் 'கந்தோத்கட'னுக்குப் பல நாடுகளையளித்து அவனை உயர்பதவி யில் அமர்த்தினான். 'சுநந்தை'க்கு 'தேவி' என்ற பட்டமளித்தான். 'நந் தாட்ய'னை இளவரசனாக்கினான். 'பத்மாஸ்யனை' முக்கிய மந்திரியாகவும் 'விஜய'னைச் சேனாபதியாகவும் நியமித்தான். மற்ற நண்பர்களுக்கும் தக்க பதவியளித்தான். தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய கந்தருவனுக்கு ஓர் கோயில்கட்டி, அதில் அவனைப்போல் விக்கிரகம் செய்துவைத்தான். அதனால் அவன் புகழ் எங்கும் பரவியது. பின்பு அவன் நீதிவழுவாமல் செங்கோல் செலுத்தி வந்தான்.

பத்தாவது இலக்ஷணையாரிலம்பகம் முடிந்தது.

அப்பால் 'ஜீவகன்' இராஜ்ய லக்ஷ்மியையும் 'இலக்ஷணை'யை யும் பெற்றதால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். வெகுகாலமாய்க் கிட்டாதபொருள் கிடைத்தால் மிகுந்த சந்தோஷ மேற்படுமன்றோ? ஜீவகன் அரசாட்சியைப் பெற்றபின்பும் சகல நற்குணங்களோடும் விளங்கினான். அறிவாளிகள் இன்ப துன்பங்களில் ஒரே விதமா யிருப்பர். அதனால் ஜீவகன் ஆட்சிபுரியும் போதும் மாறுபட வில்லை. அப்பொழுது ஜீவகன் தனது குடிகளின் சுக துக்கங்களைத் தன்னுடையனவாகவே பாவித்து வந்தான். அரசர்கள் குடிகளுக் குப் பிறப்பித்தலைமட்டும் செய்யாத பெற்றோர்களன்றோ? அவன் கப்பம் வாங்கிய பொருளையெல்லாம் குடிகளின் நன்மையின் பொருட்டே செலவு செய்தான். அவன் மித்திர உதாஸீனன், சத் துரு இவர்களின் தேசங்களில் ஒற்றர்களையனுப்பி, விஷயங்களை யுணராவிடினும், தன்னுடைய அறிவின் கூர்மையால் அத்தேசத்து விஷயங்களை அறிந்துவந்தான். இராப்பகலினுள்ள 'யாம'ங்களில் தான் செய்யவேண்டிய காரியங்களைத் தீர்மானித்து வைத்திருந் தான். கால விளம்பத்தால் காரியம் கெடுமல்லவா? யோக க்ஷேமங் களின் விஸ்தாரத்தினால் அரசாட்சியானது தவத்தோடு சமமாயிருக்

கின்றது. கொஞ்சம் தவறிப்போனால் பெருங்கேடு விளைகின்றது. தவறாமல் கவனித்துவந்தால் மிகுந்த நன்மை உண்டாகின்றது. ஜாக்ரதையுள்ள ஜீவகன் உலக முழுவதையும் ஒரே பட்டணத்தைப் போல் சுலபமாகக் காத்து வரும்போது பூமிதேவியும் நல்ல அரசனைப் பெற்றவளாயும் இரத்தினங்களை உண்டாக்குபவளாயும் ஆயினள்.

இவ்வாறு ஜீவகன் விளங்கி வரும்பொழுது, 'விஜயை'யானவள் நான் என்புதல்வன் அரசாட்சி புரிவதையும் என் கண்ணால் கண்டு விட்டேன்; முன்பு எனக்கு உதவி செய்தவர்களுக்கும் நான் தக்கவாறு கைம்மாறு செய்துவிட்டேன். புண்ணிய பாபங்களின் பலனை நான் என்னிடத்திலேயே நேரில் கண்டுகொண்டேன். இவ்விஷயத்தில் சாஸ்திரங்களால் நம்பிக்கை ஏற்பட வேண்டியதில்லை. ஆகலால், நான் இனிப் புதல்வனிடம் வாஞ்சையை விட்டுவிட்டுத் தவஞ் செய்வதே தகுதியானது. அறிந்திருந்தும் அக்கினியில் விழுவது தீயோர் செய்கையன்றோ? என்று வைராக்கியமடைந்து உலகத்தில் ஒழிவை யடைந்தாள். அதைக்கண்டு 'சுநந்தை'யும் ஒழிவைப் பெற்றாள். பின்பு இருவரும் 'ஜீவக'னை வாழ்த்தி, அவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தவஞ்செய்வதற்காக வனத்திற்குச் சென்றனர். ஜீவகனும் அவர்களோடு சென்றான்.

அப்பால் வனத்திலுள்ள 'பத்மா' என்ற தவசியானவள் 'விஜயை'க்கும் 'ஸுநந்தை'க்கும் தவஞ்செய்வதற்குரிய வழியைத் தெரிவித்தாள். அவள் ஜீவகனைப்பார்த்து, "தவஞ் செய்வோரை எப்பொழுதும் ஒருவரும் தடைசெய்வது கூடாது. முதுமைப் பருவத்திலாகினும் அறிவாளிகள் 'தீக்ஷையை' ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆதலால் நீ தாயின் பிரிவுக்கு வருந்தாமல் நாட்டுக்குச் சென்று, செங்கோல் செலுத்திவா!" என்று உபதேசித்தாள். அதைக்கேட்ட 'சீவகன்' ஒருவாறு சமாதானமடைந்து தவசினியையும் தாய்மாரையும் நமஸ்கரித்துவிட்டுத் தனது அரண்மனைக்கு வந்து அரசு செலுத்தி வந்தான்.

பின்னர் ஜீவகனுக்கு அவனுடைய எட்டு மனைவியரிடத்திலும் எட்டுப் புத்திரர்கள் பிறந்தனர். அவர்கள் நற்குண நற்செய்கைகளில் ஜீவகனிலும் மேம்பட்டு விளங்கினர். ஜீவகன் தன் பிள்ளைகளுக்குத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு வில்வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய சகல வித்தைகளையும் கற்பித்தான். அப்புதல்வர்களும் அவ்வித்தைகளுள் மேம்பட்டு விளங்கினார்கள்.

இவ்வாறு 'சீவகன்' இந்திரபோகத்தை அநுபவித்துக்கொண்டு முப்பது வருஷங்களைக் கழித்தான். அப்பால் ஒரு சமயம் வசந்த காலத்தில் ஜீவகன் தன் மனைவியருடன் ஆற்றில் ஜலக்ரீடை செய்து மகிழ்ந்தான். பின்பு அவன் களைப்பினால் பூங்காவனத்தில் கொடிப் பந்தலில் உட்கார்ந்துகொண்டு, அங்கே குரங்குகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே ஓர் ஆண் குரங்கு தான் வேறு பெண் குரங்கோடு சேர்ந்ததால் கோபித்திருந்த தன் மனைவி யான குரங்கைப் பலவாறு முயன்றும் சமாதானப்படுத்த முடிய வில்லை. உடனே சூதுள்ள ஆண் குரங்கு இறந்ததுபோல் கீழே படுத்துவிட்டது. அதைக்கண்ட பெண் குரங்கு உடனே ஓடிவந்து ஆண் குரங்கைக்கையால் தடவிக்கொடுத்துச் சமாதானப்படுத்திற்று. பிறகு ஆனந்தமுற்ற ஆண் குரங்கு தன் மனைவிக்கு ஓர் பனம் பழத் தைக் கொடுத்தது. உடனே தோட்டக்காரன் கையில் தடியுடன் வந்து குரங்கை அதட்டிவிட்டு அப்பழத்தைப் பிடுங்கிச் சென்றான். இவற்றையெல்லாம் கண்டதும் அறிவாளியாகிய ஜீவகன் வைராக் கிய மடைந்து தத்துவங்களைச் சிந்திக்கலானான்:—

"கைப்பழமிழந்த மந்தி காஷ்டாங்காரனை யொத்தது; இப்பழந் துரந்துகொண்ட சிலதனும் என்னை யொத்தான்; இப்பழம் இன்று போகத்தின்பத்தை யொத்தது; ஆதலால் அரசாட்சியை நானே விலக்கவேண்டும். ஹே ஆத்மாவே! பிராணிகள் பிறக்கின்றனர்; வளர்கின்றனர்; மீண்டும் இறக்கின்றனர்; எவரும் எப்பொழுதும் இருப்பதில்லை. ஆகலால் மோக்ஷமார்க்கத்தைத் தேடு. ஆயுளானது இப்பொழுதே அழிகின்றதோ அல்லது நூறு வருஷங்கள் கழிந்த பின் அழிகின்றதோவென்று அறிய முடியவில்லை. பிராணிகளின் எண்ணங்களோ கணக்கற்றவைகளாயிருக்கின்றன. வெகு காலம் சேர்ந்திருப்பினும் பின்பு விஷயங்கள் பிரிந்து போகின்றன. அவை களை நாமே விலக்கி விட்டால், முக்தி சுலபமாய் ஏற்படுகின்றது. இன்றேல் பிறவி யுண்டாகின்றது. அழியும் உடலால் அழிவற்ற சுகம் கிடைக்கும்பொழுது அழிவுள்ள சுகத்தைத் தேடுவது அறிவு டைமை யாகுமா? கணப்பொழுதையும் வீணாக்கலாமா? ஏ ஜீவனே! நீ கடலில் மரக்கலமிழந்த மாலுமியைப் போலிருக்கிறாய்; உனக்கு அடைக்கலமானவர் எவருமில்லை. அன்புள்ள சுற்றத்தார் ஆயுதங் களுடன் நாற்புறமும் சூழ்ந்து நின்று காத்துவரினும், பிராணிகள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அழிகின்றனர். மந்திரம், யந்திரம் முதலியனவும் ஜீவனை ரக்ஷிப்பதில் நேராகக் காரணமாவ

தில்லை. புண்ணியமிருந்தால் தான் அவையும் பயன்படும். புண்ணிய மின்றேல், அவைகளாலும் பயன் ஏற்படாது. ஹே! ஜீவனே! நீ கர்மவசத்தினால் நடனைப்போல் அநேக வேஷங்களை யெடுத்துக் கொண்டு திரிகின்றாய்; பாபத்தினால் நரகத்திலும், புண்ணியத்தினால் சுவர்க்கத்திலும், பாபபுண்ணியங்களால் பூலோகத்திலும் பிறந்து உழலுகின்றாய். ஏ சீவனே! நீ கூட்டிலடைக்கப்பட்ட சிங்கம்போல் மோக்ஷம் வரையில் தேகத்தில் அடைக்கப்பட்டு வருந்துகின்றாய்; நீ அநுபவிக்காத சுகம் பாக்கி யில்லை; ஆயினும் சுகபேசத்தின் பொருட்டே மீண்டும் கஷ்டப்படுகிறாய்; ஹே! ஆத்மாவே! நீ முன்பு அநுபவித்ததும் அற்பமுமான சுகத்தையே மீண்டும் பெற முயலுகின்றாய்; முன்பு அநுபவிக்காத அனந்தமான மோக்ஷ சுகத்தைப் பெற விரும்புகின்றாயில்லை. இராகம் முதலியவற்றால் கர்மங்களும், கர்மங்களால் சரீரமும், சரீரத்தால் இந்திரியங்களும், இந்திரியங்களால் இராகாதிகளும் உண்டாகின்றன. இவ்வாறு சக்கரம்போல் சுழன்று வரும்போது இப்பிறவிக் கடலின் கரையைக் காண்பதெப்படி? அநாதியாயும் காரியகாரண ரூபமாயுமுள்ள இந்த ஸம்ஸாரபந்தத்தில் எந்தக் கர்மத்தினால் சுழன்று வருந்துகின்றாயோ, அந்தக் கர்மாவைத் தொலைக்க முயற்சி செய்!

"ஹே! ஆத்மாவே! நீ கர்மவசத்தால் அநேக சரீரங்களை எடுத்தும் விட்டும் வருகின்றாய்; ஆயினும், சகல பிறவியிலும் மரணத்திலும் நீ ஒருவனாகவே இருக்கின்றாய். சுற்றத்தார் சுடுகாடு மட்டுமே வருவர். சம்பாதித்த பொருளும் வீட்டிலேயே இருக்கும். சரீரமும் சாம்பலாகு மட்டும் இருக்கும். ஆனால், ஆத்மாவை தர்மம் ஒன்று தான் விடுவதில்லை. புத்திரன், மித்திரன், களத்திரம் முதலியவை ஆத்மாவைப் பின் தொடராதது ஆச்சரியமன்று. ஏனெனில், பிறவி முதலுண்டான உடலே பிரிந்து போகின்றதல்லவா? ஹே! ஆத்மாவே! கர்மங்களைச் செய்கின்றவனும் நீயே; அவற்றின் பயனைப் புசிப்பவனும் நீயே; கர்மங்களைத் தொலைப்பவனும் நீயே; ஆகலால், நீ முக்தியைப் பெறுவதற்கு ஏன் முயலக்கூடாது? சுகத்தைப் பெறுவது கர்மங்களாலேயே சாத்தியமா யிருக்கும்பொழுது, நீ ஏன் நற்கருமங்களைச் செய்யாமல், தீயகருமங்களைச் செய்கின்றாய்? ஆத்மாவே! "சரீரம் தான் நான்" என்று நீ ஒருபொழுதும் எண்ணாதே! கர்மவசத்தால் உனக்குச் சரீரத்தோடு சேர்க்கை ஏற்பட்டுள்ளது; நீ கோசத்திலிருக்கும் கத்தியைப்போலிருக்கின்றாய்; சரீரமானது அநித்தியமாயும் அசுசியாயும், அசித்தாயும் இருக்கின்றது.

210428

ஆத்மாவானது நித்தியமாயும் சுசியாயும் சித்தாயும் இருக்கின்றது. ஆதலால் சரீரமே ஆத்மாவன்று; தீயவழியில் தானே செல்லும் புத்தியானது நல்வழியில் முயற்சித்தாலும் செல்வதில்லை; அதற்குக் காரணம் நல்வினையின்மையாதலால், நல்வினையைச் செய்தல் வேண்டும்.

எதனுடைய சம்பந்தத்தால் சுத்தமான பொருளும் அசுத்தமாகின்றதோ அந்த மலத்தைக் காரணமாகவுடைய சரீரமானது அசுசியென்பதில் ஐயமேது? சரீரம் கர்மசில்பியின் சாமர்த்தியத்தால் மேல் நோக்காகப் பார்த்தால் ரமணீயம்போல் தோற்றுகின்றது; ஊகித்துப் பார்த்தால், சரீரத்தில் மலம், மாம்ஸம், எலும்பு, மஜ்ஜை இவைகளைக் காட்டிலும் வேறு பொருள் ஒன்றுமில்லை. ஆத்மாவே! அழிவுள்ளதும், அநித்திய சுகத்தைக் கொடுப்பதும், மாம்ஸபிண்டமானதுமான சரீரம் அழியுமுன்னமே, அதனால் பெறக்கூடிய நித்திய சுகத்தைப்பெற்று, அவ்வுடலைத் தள்ளிவிடு. சரீரம் அழியுமுன் அதனால் பெறக்கூடிய ஸாரத்தைப்பெற்று, அது அழிந்த பின்பு துக்கப்படாதே! சாரமற்ற கருப்பஞ்சக்கையை நெருப்பில் போட்டு எரிக்கும்போதும் மனிதர் வருந்துவதில்லை. கர்மங்களால் நிறைந்திருக்கும் வரையில் ஆத்மா நீரால்நிறைந்த மரக்கலம் போல் கரையேற முடியாது. அந்த 'ஆஸ்ரவ'த்திற்குக் காரணம் 'யோக'மும் 'பாவ'முமாம். அவைகள் சஞ்சலங்கள். ஆத்மாவே! "இந்தக் கர்மாவுக்கு இது ஆஸ்ரவம்" என்று கர்மத்தின் காரணங்களை யுணர்ந்து, அவற்றின் காரணங்களை ஒழிப்பதால், கர்மங்களைத் தொலைத்து முக்தனாக ஆகக்கடவாய்!

"ஹே! ஆத்மாவே! நீ *'ஸமிதி'யையும் 'குப்தி'யையும் ரக்ஷித்து 'அநுத்ப்ரேக்ஷை'களில் முயற்சி யுள்ளவனும், தவம், ஸம்யமம், தர்மம இவற்றை உடையவனும், 'பரீஷஹ'ங்களை ஜயித்தவனும்

---

* எப்பிராணிகளையும் பீடியாதிருத்தல் "ஸமிதி" யெனப்படும். பாஹிம்ஸையின்றிச் செல்லுதல், அவ்வாறே பேசுதல், அவ்வாறே இச்சித்தல், அவ்வாறே தானஞ்செய்தல், உத்ஸர்க்கம் என்று 'ஸமிதிகள்' ஐவகையாகும். தீய கர்மங்களினின்றும் ஆத்மாவைக் காத்துக்கொள்வது "குப்தி" யெனப்படும். மனதை யடக்குதல், வாக்கை யடக்குதல், காயத்தை அடக்குதல் என்று 'குப்தி' மூவகையாம். அநித்யத்வம், அசரணம், ஸம்ஸாரம், ஏகத்வம், அன்னியத்வம், அசுசித்வம், ஆஸ்ரவம், ஸம்வரம், நிர்ஜரம், லோகம், போதிதுர்லபம், தர்மம் என்று "அநுத்ப்ரேக்ஷை"கள் பன்னிரண்டு வகையாகும். 'தவம்' பாஹ்யம், ஆந்தரம் என இருவகைப்படும். 'ஸம்யமம்' என்றால் 'சாரித்ரம்' என்று பொருள். அது ஐவகைப்படும். க்ஷமை, ஸத்யம், தூய்மை முதலியவை 'தர்மம்' எனப்படும். பசி, தாகம், குளிர், வெப்பம், வியாதி, துக்கம் முதலியவை "பரீஷஹங்கள்" எனப்படும். அவைகளைப் பொறுத்திருப்பதே அவைகளை ஜயிப்பதாகும். ஸ்திரீயைப்பற்றிய கதைகளும் போஜனத்தைப்பற்றிய கதைகளும், தேசத்தைப்பற்றிய கதைகளும், அரசனைப்பற்றிய கதைகளும் "வியர்த்தமானகதை"களாம்.

ஆகக்கடவாய்! ஹே! ஆத்மந்! நீ இவ்விதம் இருந்தால், கர்மாஸ்ரவங்களைத் தகைவதனல் பொத்தலற்ற மரக்கலம்போல் ஸம்ஸாரக் கடலில் அபாய மற்றவனுக ஆவாய். ஆத்மாவே! நீ வியர்த்தமான கதைகளை விட்டவனுயும், ஆத்மபாவனையோடு கூடியவனுகவும், வெளிவிஷயங்களில் பற்றற்றவனுகவும் ஆகக்கடவாய். அப்பொழுது 'குப்தி' முதலியவை உன் கரத்திலே இருக்கும். நீ சுகமாகப் பெறக்கூடிய மோக்ஷ மார்க்கத்தில், புத்தியைச் செலுத்துவாய். தாபத்தை யளிக்கும் வெளி விஷபங்களில் புத்தியைச் செலுத்தாதே; ஆத்மாவே நீ வெளி விஷபங்களில் உழல்வதால் கஷ்டங்களை அநுபவித்தது உனக்கே பிரத்தியக்ஷமானது.

"ஆத்மாவே! நீ கர்மங்களின் 'க்ஷய'த்திஞலும் 'அனுஸ்ரவ'த்திஞலும் முக்தனுக ஆகக்கடவாய். உட்செல்வதும் வெளிச்செல்வதும் இராவிடின், ஓடையில் நீர்ஏது? அப்பொழுது உன்னிடம் இரத்தினத்திரயங்களின் பரிபூர்த்தியும் ஏற்படும். மோகமும் கலக்கமும் இல்லாதவனின் 'பரிணுமம்' நிர்மலமா யிருக்குமன்றே? பரிணுமபரிசுத்தியின் பொருட்டு பாஹ்யமானதவம் விதிக்கப்பட்டிருக்கிறது. நெருப்பில்லாவிடின், அரிசியைப் பக்குவ மாக்கலாகுமோ? வெளிவிஷயங்களில் நீ பற்றற்றவனுயிருந்தால், உனக்கு பரிணுமசுத்தி ஏற்படும். ஆசையில்லாமையே ஸௌக்யமாகும். ஆதலின், நீ வெளிவிஷயங்களில் ஏன் உழலுகின்றுய்? ஆத்மாவே! நீ க்ஷணப்பொழுதேனும் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, ஆத்மாவினிடம் ஆத்மாவினல் ஆத்மாவைப் பார்ப்பவனுய்ச் சுகத்தைப் பெறக்கடவாய். "ஆத்மாவிடம் உண்டான ஸௌக்யம் அனந்தமானது" என்பது ஆத்மப்பிரத்யக்ஷமுள்ளவருக்கு அநுபவஸித்தமானது. ஆத்மாவே! நீ அஞ்ஞான மிருக்கும்வரையில ஸம்ஸாரத்தில் உழலுகின்றுய். காரணம் வளரும்போது காரியம் அழிவுறுவதில்லை. ஆதலால், நீ தவஞ்செய்வதில் முயற்சிசெய். ஒளியைக் கண்டதும் இருள் விலகுமன்றே? ஆத்மாவே! இரத்தினத்திரயங்களைப் பெறுந்தன்மையும், கர்மபூமியில் பிறவியும், மானிடப்பிறவியும், நல்ல அவயவங்களையுடைமையும், ஒவ்வொன்றும் துர்லபமாகும். யாவற்றையும் பெறுவது அரிதன்றே? ஆத்மாவே! உனக்குத் தர்மத்தில் புத்தி செல்லாவிடில், மானிடப்பிறவி முதலியனவும் வீணேயாகும். கதிர் வெளிவராவிடில், நிலத்தின் குணத்தால் பயனென்ன? ஆகலால் நீ சரீரத்தைத் தர்மநிமித்தம் கற்பிக்கக்கடவாய். விபூதி நிமித்தம் இரத்தினங்களை எரிப்பவனிலும் மூடன் வேறுண்டோ? தர்மத்தால் தேவ

தையும் சுணங்கனுவன்; நாயும் புண்ணியத்தினல் தேவதையாகும். ஆதலால், நீ தர்மத்தைச் செய்யக்கடவாய். புவியில் தர்மமே இஷ்டங்களையளிக்கும். பவ்வியனும், வெளி விஷயங்களில் பற்றற்றவனும், ஸகல பிராணிகளிடமும் கருணையுள்ளவனும், திரிகரண சுத்தனும் உள்ளவனுக்கு 'போதம்' எற்படும். தர்மம் செய்தவன் ஒருபோதும் வருந்துவதில்லை. அவனை உலகில் யாவரும் கொண்டாடுகின்றனர். தார்மிகன் இம்மையிலும் மறுமையிலும் சுகமடைகிறான். ஹே! ஆத்மாவே! நீ ஆத்மாவுக்கு ஹிதமான விஷயங்களில் பிரவர்த்திக்கக் கடவாய்; அதுவே முக்தியையளிக்கும்.

இவ்விதம் சீவகன் சிந்தித்ததால் அவனுக்கு வைராக்கியம் திடப்பட்டது. ஸ்திரமாயிருத்தலே நல்லோரியல் பாகுமன்றோ?

அப்பால் ஒழிவையடைந்த சீவகன் அங்கிருந்து திரும்பி வந்து பரமேசுவரனைப் பூஜித்துவிட்டு, அங்கு ஓர் முனிவரிடம் தருமோபதேசத்தைப் பெற்றான். அவ்வுபதேசத்தால் சீவகன் மனம் இன்னும் நிர்மலமாயிற்று. இரத்தினகிரணமானது சிற்பிசாணையில் தீட்டுவதால் அதிகப்பிரகாச மடையுமன்றோ? பிறகு சீவகன் அம்முனிவரிடம் தனது பூர்வஜன்ம விருத்தாநதத்தைத் தெரிவிக்கும்படி கேட்டான். உடனே முனிவர் சிறிது நேரம் தியானித்துப் பார்த்துவிட்டு, சீவகனை நோக்கி, "ராஜஹம்ஸ! தாதகீஷண்ட"த்தில் "பூமிதிலக" மென்னும் நாட்டில் 'பவனவேகன்' என்ற ஓர் அரசனிருந்தான். அவனுக்கு நீ 'யசோதரன்' என்ற பிள்ளையாகப் பிறந்திருந்தாய்; நீ ஒருசமயம் விளையாடுவதற்காகக் கூட்டினின்றும் ஓர் அன்னத்தின் குஞ்சை எடுத்துவந்து கொன்றுவிட்டாய்; உன் தந்தை அவ்விஷயத்தை எவ்விதமாகவோ அறிந்து உனக்கு தருமத்தை உபதேசித்தான். அதனால் தான் நீ அதிக தார்மிகனு யிருக்கின்றாய். பிறகு பிதாதடுத்ததையும் கேளாமல் நீ வைராக்கிய மடைந்து எட்டு மனைவியரோடும் 'ஜைநதீக்ஷை'யை ஏற்றுக்கொண்டாய். பின்பு நீ கோரமாகத் தவம்புரிந்து மனைவியருடன் தேவலோகஞ் சென்று வசித்துவிட்டு, மீண்டும் எட்டு மனைவியரோடு இப்பூவுலகில் வந்திருக்கின்றாய். முன்பு நீ அன்னத்தின் குஞ்சைக் கூண்டில் அடைத்து, பெற்றோரைப் பிரித்து வருத்தியதால் உனக்கு பந்துக்களின் பிரிவுடன் பந்தம் ஏற்பட்டது." என்று தெரிவித்தார்.

இவ்வாறு முனிவர் மொழிந்ததைக் கேட்ட சீவகன் இடியுண்ட நாகம்போல் நடுங்கி, அரசாட்சியில் வெறுப்புற்று, முனிவரிடம் வணங்கி விடைபெற்று நகருக்குச் சென்றான். பிறகு சீவகன் மனை

விகளுக்குத் தருமோபதேசம் செய்தான். அதைக்கேட்டதும் அவர்கள் இராஜபோகத்தை விஷமாக நினைத்தார்கள். பின்பு சீவகன் 'கந்தருவதத்தை'யின் புத்திரனாகிய 'ஸத்யந்தரனுக்கு இராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ் செய்து வைத்துவிட்டு, மனைவிபருடன் தபோவனத்திற்குச் சென்றான். பின்பு அவன் 'ஸ்ரீஸபை'க்குப் போய் 'ஜினதேவரைப் பூஜித்துத் துதிக்கலானான்:—

"ஹே! பகவானே! நான் ஸம்ஸார நோயால் பீடிக்கப்பட்டுப் பயப்படுகின்றேன்; அகாரண வைத்தியராகிய நீர் அந்நோயின் கொடுமையைக் கண்டும் உதாஸீனமாயிருப்பது தருமமோ? நீர் எல்லோருக்கும் நன்மை செய்கிறீர்; யாவற்றையும் அறிகிறீர்; பிராரப்த கர்மங்களைப் போக்குகின்றீர்; நானோ 'பவ்விய'னாயிருக்கின்றேன். ஆயினும் எனது பிறவிநோய் ஏன் நீங்கவில்லை? தேகமாகும் பாழுங் காட்டில் மோகமாகும் காட்டுத் தீ எரிவதால் சுழன்று கொண்டிருக்கும் என்னை மோகமற்ற நீர் காக்கவேண்டும். சகலமான ஆபத்துக்களாகும் பழங்களையுடைய ஸம்ஸாரமாகும் நஞ்சு மரத்துக்கு மூலைபோன்ற இராகத்தை ஆசையற்ற நீர் வேருடன் அழிக்கவேண்டும். ஹே! தேவ! நீர் பிறவிக்கடலுக்கு மாலுமியா யிருக்கின்றீர்; பிறவிக் கடலின்நடுவில் மூழ்கியிருக்கும் எனக்கு 'இரத்தினத்திரய'மென்னும் மரக்கலம் கிடைத்தது. அது எனக்கு முக்தியை யளிக்க வேண்டும்" என்றான்.

இவ்வாறு சீவகன் துதித்தபின் 'வர்த்தமான ஸ்வாமி'யிடம் அநுமதி பெற்று 'ஜிநதீக்ஷை'யை ஏற்றுக்கொண்டு கணநாயகரை வணங்கினான். பின்பு அவன் 'ஹரிசந்திர'ரென்ற முனிவரருகில் அமர்ந்து கோரமாகத்தவம் புரிந்தான். அதனால் முறையே (1) எட்டுக் கர்மங்களுக்கும் நாசம் ஏற்பட்டது. பின்பு சீவகமாமுனி இரத்தினத்திரயங்களையும் பூர்த்தியாகப் பெற்று அனந்த ஞானம் முதலிய (2) எட்டுக் குணங்களையும் பெற்றான். பிறகு சீவகன் அழிவற்றதும், உவமையற்றதும், ஆனந்த மயமானதுமான 'முக்தி'யைப் பெற்றான். குணங்களால் க்ஷத்திரியர்களுக்கு 'சூடாமணி' போன்றவனும், தேஜஸ்ஸாலும் வபதாலும் சௌரியம் பொருந்தியவனும்,

---

1. ஞானவரணீயம், தர்சனவரணீயம், மோகனீயம், வேதனீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் எனக்கர்மங்கள் எண் வகைப்படும்.

2. அனந்த ஞானம், அனந்த தர்சனம், அனந்த வீரியம், அனந்த சுகம், அவ்வியாபாதத்வம், அகுருலகுத்வம், அதிஸூக்ஷ்மத்வம், அவகாஹநத்வம் எனக் குணங்கள் எண் வகைப்படும்.

பெரிய நிதிகளால் குபேரனைப் போன்றவனும், அரசர்க்கரசனுமான இவ்வரசன் எப்பொழுதும் நன்கு விளங்கக்கடவன்!

ராஜதாம் ராஜராஜோபம் ராஜராஜோஹோபயெ: ।
தெஜஸா வயஸா ஶூர: க்ஷத்ரவம்ஶஶிரோமணி: ॥

சுபமஸ்து!

(பதினோராவது முக்தி ஸ்ரீ லம்பகம் முடிந்தது.)

க்ஷத்ர சூடாமணி முற்றிற்று.

By M. M. Narayanaswamy Aiyar,
Mudikondan, P. O.
(via) Nannilan)

நமது பெருங்குறை.

165-பக்கத்தொடர்ச்சி.

கல்வியென்பது கற்பு என்ற அர்த்தத்தை விளக்கும். கற்பு வைராக்கியத்திற்கும் கல்வி அவசியம். பெண்களுக்குக் கல்வி முக்கியமென்பது சென்ற சிலன்களில் வரையப் பட்டுளது. இனிமேல் நமது மாதர்கள் எந்தப்பாஷையில் பயிலலாமென்பதையும், என்னென்ன நூற்கள் கற்கலாமென்பதையும், ஒருவாறு ஆராய்ந்து வரைவாம்.

நமது பெண்மக்கள் நமது பாஷையையே கற்கவேண்டும். நமது பாஷையென்பது என்ன? தென்மொழியாகிய அமிழ்தினு மினிய தமிழ் மொழியேயாகும். ஏன் தமிழ் மொழியைத்தான் கற்க வேண்டும்? எனின், இதனால் பல நன்மைகளுண்டு; அன்னிய பாஷைகளால் நன்மையில்லை. ஆங்கில மொழியை நாம் எதற்காகக் கற்கிறோம்? ஏதாவது அதிலிருந்து ஞானத்தைத்தெரிந்து, மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அடைய வழியிருக்கிறதெனக் கற்கிறோமா? அல்லது, பிதுர்வாக்கிய பரிபாலனங்கள், செவ்வையான வழிகள், உலக நீதிகள், முதலியவற்றை அது கற்பிக்கிறதெனக் கற்கிறோமா? இவற்றுள் ஒன்றுமில்லையே; பின்னை எதற்காகக் கற்கிறோமென்றால் "ஆங்கில பாஷை அரசபாஷை. இதைக்கற்றால், இக்காலத்தில் பிழைப்புக் கிடமுண்டு. சுகமாக வாழலாம்" என்ற நோக்கத்தால் நீர்க்குமிழி, உப்புச்சுவர், மண்பாண்டம், இவைகளுக்கொப்பாக உள்ள உடம்பினை வளர்க்கவே ஆங்கிலக் கல்வியைக் கற்கிறோம்.

வாய்வல்லார் வேறுவிதமாக, ஆங்கிலம் ஞானமொழி என்றும் தமிழைவிடச் சிறந்ததுஎன்றும், எவரும் வரைய முன்வருவரேல், அது எட்டுச் சுரைக்காயேயாகும். முன்னர்க் கூறியவாறு எந்த நூலிலாவது, பெண் சம்பாதித்துப் புருடன் சாப்பிடவேண்டுமென எழுதியிருப்பதாக, இது காறும் வதந்தியைக் கூடக் காணோம். ஆதலின், வயிற்றுப் பிழைப்புக்கெனவே, கற்கப்படும் ஆங்கில பாஷை, பெண்களுக்குத் தேவையில்லை. நமது பெண்மக்கள் ஏன் ஆங்கிலம் கற்கலாகா தென்பதற்கு, அநேக காரணங்களுள. நமது தென்மொழி நூற்களில் பதிவிரதைகளின் சரிதங்களும், கற்பிலக்கணங்களும் செவ்வையாக வரையப்பட்டிருக்கின்றன. இதற்குச் சான்றுகளாக அக்கினியாற்றைக் குளிரவைத்த சந்திரமதி, எற்ற சமயத்தில், நியாயநிலையில் வேடனை எரித்த தமயந்தி, மண்ணைக் கடலையாக வறுத்த அனுசூயை, பர்த்தாவின் உயிரை எமனிடமிருந்து திரும்பப்பெற்ற சாவித்திரி, முதலியவர்களின் சரிதங்கள் தமிழ் நூற்களில் மலிந்து விளங்குகின்றன. ஆனால் ஆங்கில நூற்களிலோ இவைகளைக் கட்டுக் கதைகளாகக் கூடக் காணோம். கற்பு என்பது அப்பாஷையிலே கிடையாது. அது அவர்களுக்கு நரிக்கொம்பேயாகும். அதிற் காதற் கதைகளைக் கணக்கற்ற நிலையில் காணலாம். அந்நிய வாலிபனோடு, மணமான மங்கையொருத்தி, கைபிடித்துக் கடற்கரைக்கு உலவச் சென்றாள், என்ற வினோதக் கதைகளை, ஆங்கில பாஷையில் அபரிமிதமாகக் காணலாம். தனது மனைவி அன்னிய ஆடவனுக்கு இரகசியமாகக் காதல் கடிதம் வரைந்து கொண்டிருக்கிறாள் என்ற சமாசாரத்தைக் கேள்விப்பட்டு ஒரு ஆடவன் சந்தேகித்துக் கொண்டிருக்கையில், தனது மனைவிக்கு, தான் சந்தேகித்த மனிதனிடமிருந்து, ஒரு கடிதம் வந்தால், அவன் அதைப் பிரித்துப் பார்க்கலாகாது. அப்படிப் பார்த்திருப்பதாகத் தெரிந்தால் அந்த அம்மாள் உடனே அவன்மேல் வழக்குத் தொடுப்பாள். அவனும் தண்டனை யடைவன். இது ஆங்கிலச் சட்டத்திலொன்று. இன்னொன்று, மற்றொரு காதலனோடு தனது மனைவி தன் வீட்டில், தனியறையில் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், சொந்தப்புருடன் வந்தாலும், அவனுக்கு என்ன அவசர ஜோலி யிருந்தாலும், அவன் வெளியே காத்திருந்து தன் மனைவியின் அநுமதியைப் பெற்றாலொழிய உட்செல்லலாகாது. இத்தகைய அநாச்சாரங்களை, நமது நாட்டுப் பெரியோர்கள் காதில்கேட்டஅளவிலேயே, இவைகள் பாபகரமான சொற்களென்று, தம்மிரு

காதுகளையும் இருகைகளாலும் மூடிக்கொள்வர். அந்தந்த பாஷைக்குரிய ஆசாரங்களை, அதைப் படிப்போர்க்கு, உண்டாகும் என்பது பெரியோர் கூறும் உறுதிமொழி. ஆகையால் மேல் காணப்பட்ட ஆச்சாரங்களை நமது பெண் மக்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டுமானால், நாம் அவர்களை ஆங்கிலக் கல்லூரிகளுக்கு அனுப்பவேண்டும். ஆங்கில வழக்கங்கள், இத்தகைய நிலையில், இன்னும் கொஞ்சக்காலம் நமது நாட்டில் பரவிவந்தால், அந்தோ! ஒழிந்தது பாரத பூமியின் மகிமை. தொலைந்தது பெரியோர்களின் பெருமை. அடைந்தது இந்தியாவைச் சிறுமை. நமது பெண் மக்களுக்கு எந்நிலையிலும், ஆங்கிலக்கல்வி அவசியமே இல்லை. கற்பிலக்கணங்களைச் செவ்வையாய் எடுத்தோதுவதும், நீதிவழுவா நெறிக்கட் புகுத்துவதுமாகிய, நமது தென்மொழிக் கல்லூரிகட்கே, நமது பெண்மக்களை, ஏற்றகாலத்தில், அனுப்பிவைப்பது சாலச்சிறந்தது. நிற்க நமது பெண்மக்கள், நாவல் வாசிப்பது அவ்வளவு உசிதமாக இல்லை. பொதுவாக, இக்காலத்தில் வெளிவரும் நாவல்களெல்லாம், ஏறக்குறைய, ஆன்மார்த்த விஷயங்களை விவரிப்பனவாகக் காணோம். எல்லாம் கேட்டுக்குரிய விஷயங்களையே கொண்டு வெளிவருகின்றன. இன்னும் இவை அனுவசியமான பதப்பிரயோகங்களைக் கொண்டும், காதலையே வியாசமாகக்கொண்டும் வெளிவருவதால், இவற்றை வாசிப்பது கூடாது. அபூர்வமாகச் சில நாவல்கள் நல்ல நீதியைப் பயக்கத் தகுந்த வசனங்களைக் கொண்டு வெளிவந்தாலும், நல்ல மதுரமான பாலில் ஒரு துளி விஷங்கலந்தாற்போல இடையிற் சில தாழ்ந்த விஷயங்கள் கலந்திருப்பதால் நாவல் வாசிப்பு அவசியமில்லை. வைத்திய சாஸ்திரம், பாகசாஸ்திரம் இவை இரண்டும், நமது பெண் மக்களுக்கு இன்றியமையாதனவாகும். குழந்தைகள் பொதுவாக அடிக்கடி வியாதியிலீடுபடும் தன்மையைக் கொண்டவை. ஆகலின், அவர்கட்கு வியாதிவரும் காலத்தில் வைத்திய சாஸ்திரம் கற்றதாயாயிருந்தால், ஏதாவது தக்க ஔஷதம் கொடுத்து, ஆரம்பத்திலேயே, அவற்றை மேலோங்கி வரவிடாமல் தடுத்துக் குழந்தைகளை அவ்வியாதிகளினின்றும் நீக்கிச் சுகப்படுத்துவாள். ஏற்ற ஆகாரத்தைத் தக்க காலத்தில், பிள்ளைகளுக்குப் பக்குவமாய் ஊட்டி, திடசரீரிகளாக அவர்களை விளங்க வைப்பாள். பாகசாஸ்திரம் கற்ற மாதர்கள், தத்தம் கணவர்களுக்கு அறுசுவையான பதார்த்தங்களை நளபாக வீமபாக மாகத் தயாரித்து, உதவி அதனால் அவர்களின் அன்புக்குப் பாத்திரராவர். மேலும் நமது மக்கள் சங்கீதம் கற்ப

தும் சால்புடைத்தே யாகும். உலகத்திலிருக்கும் வரைக்கும் கவலைகள் உண்டு. மனச்சோர்வுக்கும் தனது பர்த்தா சில சமயங்களில் உட்படலாகும். அப்போது மனைவி சங்கீதம் கற்ற காரிகையாயிருந்தால், இனிய கீதங்களால் தனது பர்த்தாவைச் சந்தோஷிக்கச் செய்து, அவரை, ஒருவாறு தம் துயரங்களை மறக்கச் செய்வள். உலகத்தில் சங்கீதத்தைவிட இன்பம் பயப்பது வேறொன்றுமில்லை. சங்கிதமே சந்தோஷம். சந்தோஷமேசங்கிதம். ஆனால், மனத்தைக் கெடுக்கத் தக்க கெட்ட கீதப்பாடல்களைச் சிறுமியர்க்குக் கற்றுக் கொடுக்கலாகாது; அவர்களை அன்னிய ஆடவர்களுக் கிடையிலிருந்து பாடச் செய்யக்கூடாது.

(இன்னும் வரும்.)

மூ. பெ. மாரியப்ப நாடார்,
ஞானஜோதிலைபிரேரி,
தூத்துக்குடி.

புதிய நாகரீகத்தின் முதிர்ந்த நிலை.

மேல்நாட்டு நாகரீகங்கள் பல, சில ஆண்டுகளாக நம் மிந்தியாவில் பற்பல விநோதங்களைப் பரப்பி வருகின்றன. தமிழ் நாட்டில் அவை முதிர்ந்த நிலைமைக்கு வந்துவிட்டன; இனி இவற்றிற்கு மேல் நாகரிகம் இல்லை என்ற வரையில் எட்டிப்பார்த்து விட்டன. இவற்றிற்குதாரணமாகத் தமிழர்களிடத்தில் பற்பல அற்புதச் செய்கைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் சமீப காலத்தில் மதுரையில் நடந்திருக்கும் ஒரு நவீனச் செய்கை மிக்க வியப்பை உண்டாக்குகின்றது. இவ்வருஷம் மார்ச்சுமீ 2வ மதுரை அமெரிக்கன் மிஷன் கலாசாலையைச் சார்ந்த உயர்தர மாணவிகளை, ஆசிரியர்கள் நாடகத்தில் பழக்கி நாடகம் நடத்தியதாகவும், அநேகம் பிரபுக்களும், மாணவர்களும், வந்து நாடகம் பார்த்ததாகவும், அதிகப் பணம் வசூலானதாகவும், அத்தொகை ஏதோ ஒரு கோவில் கட்டிடச் செலவிற்கு உபயோகப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டதாகவும் மதுரை ஸௌராஷ்டிர பத்திரிகை தெரிவிக்கின்றது.

இச்செய்தியைப் படித்தறிந்தவுடன், நவீன நாகரிகம் முதிர்ந்த நிலைக்கு வந்துவிட்டதென்று மிகவும் திருப்தி யடைந்தோம். அந்தோ! இந்த நாகரீகப் பீடையால் மகா உத்தமிகளாகிய நம்மிந்திய மாதர்களின் முக்கிய பூஷணங்களாகிய நாணம், மடம், அச்சம், பயி

ர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் அடியோடு தொலைந்து விடுகின்றன. நம் சாஸ்திரக் கொள்கைகளும் நாச முறுகின்றன. பெண்கல்வி அவசியமென்ற நன்னோக்கத்தில் நாடகம் முதலிய இத்தகைய இழிதொழில்களையும் புகுத்திவிட்டுச் சிலர் நம் அரிய பெண்மக்களை அனுசாரத்திற்குட்படுத்தித் தேசத்திற்கே பெரிய இழிவையுண்டாக்குகின்றனர். பெண்கல்வியால் இத்தகைய துராசாரங்களெல்லாம் உண்டாய் விடுமென்பதை உத்தேசித்தே சிலர் அஃதறவே கூடாதென்று வாதாடி வருகின்றனர். சிலர், அது நல்ல அபிப்பிராயமன்று, பெண்களுக்குக் கல்வி அவசியந்தான்; ஆனால், நல்ல சாஸ்திரங்களையும், தெய்வஸ்தோத்திரம் செய்வதற்குபயோகமாம் நல்ல சங்கீதப் பாடல்களையும் மாதர்களுக்குக் கற்றுக் கொடுப்பதால் நன்மையே உண்டாகுமென்கின்றனர். சிலர், மாதர்கள் ஆடவர்களைப் போலவே எல்லா விஷயங்களையும் கற்றுச் சுயேச்சையாய்த் திரியலாமென் கின்றனர், இம்மூன்றிலும் முன்னது அவ்வளவு சிறந்ததன்று; இரண்டாவது மிகச்சிறப்புடையது; மூன்றாவது நம் மிந்திய வொழுக்கத்திற்கு மாறானது. அங்ஙனமாயினும் இம்மூன்றாவது அபிப்பிராயத்தையே இக்காலத்தில் பலர் தழுவிப் பெண்களுக்கு ஆபாசக் கல்விகளை யெல்லாம் கற்றுக் கொடுப்பதோடு, அருவருப்பான பாடல்களோடு சங்கீதத்தையும் வெகு அக்கரையாகக் கற்றுக்கொடுத்து வருகின்றார்கள். இச்சங்கீதப் படிப்பின் பயனாக உயர்குலப் பெண்களும் குடும்பத்தை விட்டு வெளியேறி நாடகங்களில் சேர்ந்து நடிக்கத் தலைப்பட்டு நாடகங்களெல்லாம் பெண்கள் மயமாகவே திரும்பி, அத்தொழிலும் அறிஞர் அருவருக்கத் தக்க விதத்தில் பாழடைந்து வருகின்றது. இந்நிலைமையில் நாடகத் தொழிலையே பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுத்து விட்டால் இனி உண்டாகும் கேட்டிற்கு அளவு கூறவே முடியாது. பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் இந்தத்துராசாரத்திற் பிரவேசித்தாலும், அந்தப் பெண்களைப் பெற்றோர்களும் இதற் கிணங்கலாமா? இது கலிகாலக் கொடுமையே. இனி, அந்தப் பெண்களை மணந்து கொள்வோர் பின்பாட்டுப் பாடவும், மிருதங்கம் அடிக்கவும் கற்றுக் கொள்வார்களானால் அவர்களுடன் நாடகத் தொழிலில் ஒத்துழைப்பார்கள். அப்பொழுது இவர்கள் கற்றுக்கொண்ட மேல் நாட்டுப் புதிய நாகரீகம் இன்னும் திருப்திகரமான நிலைமைக்கு வந்து விட்டதென்று சொல்லலாம்.

மறைக்கிழவன்.

தருமசீலன் ஐந்தாவது ஆண்டு நிறைவு.

சந்தா நேயர்களே! தமிழபிமானிகளே! இறைவன் திருவருளாலும், உங்களின் பேருதவியாலும் சீலன் தோன்றிய இந்த ஐந்து வருடங்களாகச் சிருஞ்சிறப்பு முற்று வளர்ந்தோங்கி வருகிறான். இந்தப் பங்குனி மதியோடு சீலனுக்கு ஐந்தாவது வயது பூர்த்தியாகின்றது. அடுத்த சித்திரை முதல் இஃது ஆறாகப் பெருகும். ஆதலின், சந்தாநண்பர்கள் ஒவ்வொருவரும் இதுகாறும் சீலனை ஆதரித்து வந்தது போலவே இன்னும் பல சந்தாதாரர்களைச் சேர்த்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். முன் சந்தாப் பாக்கிகள் சில நண்பர்களிடத்தில் நிற்பதால் அவர்கள் தயவுசெய்து அவற்றை அனுப்பி விடும்படி கோருகின்றோம். பத்திரிகாபிமானிகள், தாங்களே ஞாபகத்தோடு சந்தாத் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார்களெனினும், தூண்டுதலும் வேண்டுமென்பதைப் பற்றியே அவர்களுக்கு இதைப்பற்றி ஞாபக மூட்டினோம்.

பத்திராதிபர்.

தருமசீலன் ஐந்தாம் வருடப்பூர்த்தியின் வாழ்த்து.

நேரிசை வெண்பா.

தோன்றியக்காற் றொட்டுத் துகளறுசீ லன்ஞானம்
ஆன்று வருடங்க ளைந்தளவும்—தான்றிகழ்ந்தான்
மேலும்பல் லாண்டிறைவன் மெய்யருளி னாலெந்தக்
காலும் வளர்ந்தோங்கு க.

மதுரைஜில்லா, செம்பூர், வித்வான்

வீ. ஆறுமுகஞ் சேர்வை.

விநோதகதைத் திரட்டு.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-11, பக்கம் 264.)

வேலை கடமையானவேலை எஜமான் இன்னாரென்று தெரியவில்லை என்ற கதை.

மதுரைக்கடுத்த கிராமத்தில் கருப்பன் என்ற ஓர் ஏழை மனிதனிருந்தான். இவன் அறிவில்லாத பேதை; ஜீவிக்கும் வழி இன்னதென்றறியாதவன். இவனுக்கு வாய்த்த மனைவியோ மிகவும் நல்லவள்; தான் கஷ்டப்பட்டாவது புருஷனைக் காப்பாற்றும் இயற்

கையுடையவள். கருப்பன் ஒரு வேலையும் செய்யத் திறமை யற்றவனு யிருந்தபடியால் இவள் தினந்தோறும் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தாள். பக்கத்து வீடடுக்காரன் ஒருவன் வேலை செய்து ஜீவிப்பதில் மிகுந்த கெட்டிக்காரனு யிருந்தான். கருப்பன் மனைவி ஓயாமல் ஜீவனத்திற்கு வேலைசெய்து வந்ததால் அலுத்துப் போய் ஒருநாள் தன் புருஷனை நோக்கி, "ஐயோ! நீ ஆண்பிள்ளையா யிருந்தும் ஒரு வேலையும் செய்யாமல் பெண்பிள்ளையின் கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றயே; பக்கத்து வீட்டு மனிதன் தினந்தோறும் வேலைசெய்து ஜீவிக்கின்ருனே; நீ அவ்வாறு ஏதேனுமொரு வேலை செய்யக்கூடாதா" என்று வெறுப்பாகப் பேசினுள். அப்போது கருப்பனுக்குக் கவலை யுண்டாய் விட்டது. அதனல் அவன், "நாம் சும்மா இருப்பதினுலல்லவா இவள் இப்படிப் பேசுகிருள்; நம்மாலென்ன வேலை செய்யமுடியாதா; உடனே ஒரு வேலை பார்க்கவேண்டும்" என்று தன் மனைவியை நோக்கி, "நீ என்ன! எதுவும் செய்ய முடியாதவனென்ரு என்னை நினைத்தாய்; கட்டுச் சோறு இல்லாததாலல்லவா நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்; அது மாத்திரமிருந்தால் நான் வெளியிற் போய் எவ்வளவோ வேலைகள் செய்து வருவேன்; உன்னுல் சோறு கட்டிக்கொடுக்க முடியாவிட்டால் நான் என்ன செய்கிறது" என்று வெகுமுறுக்காகப் பேசினுன்.

அப்போது அவன் மனைவி, "இப்போது நமது வீட்டுக்காருக்குப் புத்தி வந்திருக்கிறது; கட்டுச்சோறு கட்டிக்கொடுத்தால் இவர் அதிகமாகச் சம்பாத்தியம் செய்துகொண்டு வருவார்" என்று நினைத்துப் பக்கத்து வீட்டுக்காரியிடம் அரைப்படி அரிசி கடன் வாங்கிச் சோறு சமைத்து அவ்வளவையும் ஒரே மூட்டையாகக்கட்டி அவன் கையிற் கொடுத்து, "இனியாவது வேலைக்குப் போய்ப் பணம் சம்பாதித்துக்கொண்டு வா" என்று சொன்னுள். உடனே கருப்பன் மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். அவனுக்கு இன்னவிதமாகத் தான் வேலை செய்வது; இன்னமாதிரி கூலி சம்பாதிப்பது என்னும் விவரங்களில் ஒன்றும் தெரியாததலால் மதுரையின் கிழக்குக்கடைசியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, 'என்ன செய்யலாம்?' என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு வண்டி வேகமாக மதுரைக்குள் ஓடிற்று. அதைக்கண்டதும் கருப்பன், 'இந்த வண்டியைப் பிடித்துக்கொண்டு பின்னுல் ஓடுவது தான் நல்ல வேலை' என்று தீர்மானித்துக் கட்டுச்சோற்று மூட்டையை அந்த மரத்தின்

மேல் கட்டித் தொங்கவிட்டு, அந்த வண்டியைப் பிடித்துக்கொண்டு ஓடினன். அந்த வண்டியிலிருந்தவர்கள், 'எவனே வழிப்போக்கன் ஓடி வருகிறன்' என்று நினைத்துக் கொண்டார்கள். வண்டி மதுரையின் மேற்குக் கடைசியில் போய் ஒரு வீட்டெதிரில் நின்றது; வண்டியிலிருந்தவர்கள் இறங்கி அந்த வீட்டிற்குள் போய் விட்டார்கள். வண்டி காடிஹானவில் அவிழ்த்து விடப்பட்டது. கருப்பன், 'சரி ஒரு வேலை தீர்ந்துவிட்டது; இனி வேறொரு வேலை பார்க்கவேண்டும்' என்று அங்கே நின்றன். அங்கிருந்து ஒரு வண்டி கிழக்கு நோக்கி ஓடிற்று. கருப்பன் அதைப் பிடித்துக் கொண்டு ஓடினன். அது கிழக்குக் கடைசியில் போய் நின்றதும் அவன் அதைவிட்டு மேற்கே சென்ற ஒரு வண்டியின் பின்னல் ஓடினன். இப்படியே அவன் நாளெல்லாம் அங்குமிங்கும் போகும் வண்டிகளைப் பிடித்துக்கொண்டு ஓடித்திரிந்தான். கொஞ்சமும் ஒழிவு நேரமில்லாதபடியால் அவனுக்குச் சோறு சாப்பிடவும் சமயம் கிடைக்கவில்லை. வண்டிகள் வராமலிருந்தாலல்லவா அவன் கொஞ்ச நேரமாவது இருந்து சோறு சாப்பிடுவான். பெரிய நகரத்தில் வண்டிப்போக்குவாவு இல்லாமலிருக்குமா. அங்கே ஓயாமல் வண்டிகள் போய்க்கொண்டும் வந்துகொண்டு மிருந்தபடியால் அவன் சிறிது நேரமாவது நின்றல் வேலைக்குப் பங்கம்வந்து விடுமென்று நினைத்துச் சாப்பாட்டையும் கவனிக்காமல் வண்டிகளின் பின்னே ஓடிக்கொண்டே திரிந்தான். யாரும் இவனைப்பற்றி விசாரிக்கவுமில்லை; இவனும் தன்னுடைய நிலைமையை எவரிடமும் சொல்லவுமில்லை. "இதுதான் சரியான வேலை; நாம் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறேம்; நம்முடைய வீட்டுக்காரி நம்முடைய வேலையைக் கேள்விப்பட்டால் சந்தோஷப்படுவாள்" என்று ஓயாமல் வண்டிகளைப் பிடித்து ஓடிக்கொண்டே திரிகிறன். வேர்வையோ அவனுடம்பில் ஆருய்ப்பெருகி ஓடுகிறது; அவனுக்குப் பெருமூச்சு வாங்குகிறது. எவ்வளவு கஷ்டமுண்டானும் அவன் வேலையை நிறுத்தவில்லை. இத்தனை பாட்டிற்கும் அவனுக்கு எஜமான் இன்னரென்று தெரியவில்லை. தட்டுக்கும் வழியில்லை. அதனல் அவன், 'என்ன! வேலையோ கடுமையாயிருக்கிறது; எஜமான் இன்னரென்று தெரியவில்லையே; நாம் யாரிடம் கூலி கேட்பது' என்று நினைத்தான். அப்படி நினைத்தாலும் வேலையை மட்டும் விடவில்லை. "சாயுங்காலம் ஏதாவது ஒரு முடிவு ஏற்படும்; பிரயாசை வீணய்ப்போக மாட்டாது" என்று ஓடிக்கொண்டே திரிந்தான்.

இப்படி ஓடித்திரியும்போது அவனுடைய ஊரிலிருந்து வந்த ஒருவன், அவன் ஒரு வண்டியைப் பிடித்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்து, 'இவன் ஏதோ ஒரு வேலையிலமர்ந்திருக்கிறான்' என்று நினைத்து அவனை நோக்கி, "என்ன கருப்பா! வேலையிலமர்ந்து விட்டாயோ?" என்றான். அப்போது கருப்பன் நின்று பேசக்கூட நேரமில்லாமல், "வேலையோ கடுமையானவேலை, எஜமான் இன்னாரென்று தெரியவில்லை" என்று சொல்லிவிட்டு அவ்வண்டியின் பின்னால் ஓடினான். அந்த மனிதன், "இதென்ன இவனுடைய செய்கையைப் பார்த்தால் பயித்தியக்காரத்தனமாயிருக்கிறதே" என்று போய்க் கருப்பன் மனைவியிடத்தில், அவனைக்கண்டதையும் அவன் சொன்னதையும் கூறினான். அவள் திகிலுடன் ஓடிவந்து ஒரு வண்டியைப் பிடித்தோடிய தன் புருஷனைக்கண்டு, "என்ன சங்கதி? நில்" என்றாள். அவன் அப்பொழுதும் வெகு சுறுசுறுப்புடன் வேலை செய்பவனைப்போல், "வேலை கடுமையான வேலை எஜமான் இன்னாரென்று தெரியவில்லை" என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தான். அப்போது அவன் மனைவி, "அட மதிகெட்டமாடே! நீ வேலை செய்தது போதும் நில்" என்று ஓடி அவனைப் பிடித்து நிறுத்தி, அவன் செய்கைகளை விசாரித்து வயிற்றெரிச்சல் கொண்டு, "ஐயோ! சும்மா இப்படி ஓடிக்கொண்டு திரிந்தால் உனக்கெவர் காசு கொடுப்பவர்; நான் தான் ஆயுள்வரை உழைத்து உனக்குப் போடவேண்டும்; நீ வேலை செய்தது போதும்; வீட்டிற்கு வா" என்று அவனை ஊருக்கழைத்துக்கொண்டு போனாள். ஊரெல்லாரும், கருப்பன் வேலைக்குப் போய் வந்த சங்கதியைக் கேட்டு நகைத்தார்கள். கருப்பன் மனைவி ஆயுட்காலமெல்லாம் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினாள். உத்தமிகளின் குணம் இது தான். கதாசாகரன்.

தகவுரை.

செல்வியர்நியதி, அல்லது, மனைவியரின் கடமைகள்:—

இத்தலைப் பெயரமைந்த புத்தகமொன்று வரப்பெற்றோம். இது, ஸ்ரீமான். மயிலை, பா. மிக்கேல்சாமி பிள்ளையவர்களால் தமிழில் இனிய ஆசிரியப்பாவால் இயற்றப்பெற்றது. மாதர்களுக்கு இல்லற வொழுக்கங்களைச் செவ்விதிற் போதிப்பது. மாணவிகட்கின்றி யமையாதது. பெண்மக்கள் மற்ற துராசாரங்கள் மலிந்த நாவல்களைப் படிப்பதை யொழித்து இதனைப் பயின்றுவரின் மிக்க நற்பயன் பெறுவார்கள். இதன் விலை அணா-4. இப்புத்தகம் வேண்டுவோர் "எம். பி. குழந்தைசாமிப்பிள்ளை, 2/14. பிராட்வே, மதராஸ்" என்ற விலாசத்திற் கெழுதி இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

ப-ர்.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-11, பக்கம்-261.)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒருவருக்கோர் பொருளதனைத் தருவதாக
உறுதிமொழி யுரைத்துவிட்டுப் பின்னோர்நாளை
வருவதற்குத் தவணையிட்டு மனத்தில் வஞ்சம்
வைத்தவரைப் பலநாளும் அலையவிட்டு
அருவருக்கும் விதமாகக் கடைசிநாளில்
அப்பொருள்தா னில்லையெனும் அறிவிலார்க்குத்
திருவெணைத்து முதவிசெய்யாள் நரகந்தானே
சித்திக்கு மவர்களுக்குத் திண்ணமீதே. (௬௪)

தேசத்தில் கைத்தொழில்வா ணிபங்க ளோங்கச்
சேமமிகு மெனுநினைப்பைச் சிந்திக் காமல்
நேசத்தா லொருவர்செய்யுந் தொழிலின் மீது
நெடியபொறு மையடைந்து நினைவு கெட்டு
மோசத்தா லத்தொழிலுக் கிடைஞ்சல் செய்யும்
முழுமூட ரடைவதிங்கு கேடே யாகும்
காசைத்தான் பெரிதெனவே யெண்ணிச் சூது
களைச்செய்யுங் கழுதையென்றுங் கடைத்தேறுதே. (௬௫)

வகைதெரியா தேவந்து மார்க்கங் கேட்கும்
மனிதருக்கு நன்மார்க்க முணர்த்தி டாமல்
நகைபுரிந்து நேயர்களைப் போலப் பேசி
நடித்தவர்க்குத் தீயவழி நவின்று நல்ல
தகைசிறிது மில்லாமல் பின்னுமொன்று
தான்பேசி யவமைமிகப் பரிகசிக்கும்
குகை வாய்சேர் பாதகனுக் கென்றும் நன்மை
கூடாது கூடுவது குறைவு தானே. (௬௬)

ஆனந்த வல்லபன்.

இம்மருந்து பாடும் சக்தியை அதிகப்படுத்தும்.

குயிலைப்போல் இசையைத் தரக்கூடியது. தொண்டையின் இரணம், கரகரப்பு, தொண்டையின் கம்மல் இவைகளை மாற்றி நாபிமுதல் நெஞ்சுக்குழை வரையினும் நல்ல வலிவைத் தரக்கூடிய சித்தர்முறை. காலை மாலை இருவேளையும் 10-நாள் சாப்பிடவேண்டும். இதைச் சாப்பிடும் விபரமும் பத்திய விதிகளும் மருந்துடன் அனுப்பப்படும்.

10-நாளைய மருந்து விலை ரூபா 1 0 0

இஞ்சி முறப்பா.

வெட்டைச் சூட்டினால் உண்டாகும் வயிற்றுவலியை நீக்கிச் சூட்டைத் தணித்துப் பசிதீபனத்தைக் கொடுக்கும் அருமையானது. ஒரு சேர் அடங்கிய டப்பியின் கிரயம் 1 8 0

ஸ்தம்பன மாத்திரை

இது ஓர் அதிசயிக்கத்தக்க மருந்து. இரத்தபோன போகசக்தியை யுண்டு பண்ணி இன்பத்தைக் கொடுத்து நரம்புகளுக்கு வலிமையை யுண்டாக்கி விடுகின்றது. அதிக ஆனந்தத்துடன் இருக்கலாம். ஒரே மாத்திரையில்குணம் தெரியும். இதின் விபரத்தை எழுதித் தெரிந்துகொள்ளவும். 6மாத்திரை ரூபா 1 0 0

(ஓர் இரகசிய ரப்பர் பை.)

SUKANANDA.

இக்கருவி அமெரிக்கா தேசத்தில் மிருதுவான ரப்பரால் தயார் செய்யப்பட்டது. இதை உபயோகித்தால் இது, ஸ்திரீ சம்பந்தமான (Veneral Diseases) மேகரோகங்கள் அணுகாமல் சரீரத்தை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றும். பை 1-க்கு டின்னுடன் ரூபா. 1 4 0

உலகமெங்கும் கியாதிபெற்ற

டி. எம். எஸ், சுகந்த மூக்குத்தூள்,

இந்த டி. எம். எஸ். சுகந்தமூக்குத் தூளானது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டது. இது வெகு பெயர்களால் வாங்கி உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கின்றது. இந்த மேலான பெருமை தங்கிய தூளினால் தீரும் வியாதிகளாவன: ஜலதோஷம் பீனிசம் ஒற்றைத் தலைநோய் மண்டைக்குத்தல் கண்ணிலுண்டாகும். எல்லா வியாதிகள் கண்டத்திற்கு மேற்பட்ட 96-வியாதிகள் மூளையைச் சார்ந்த வியாதிகள் முதலியவைகளாம்.

சாதா மூக்குத்தூள்.		சுகந்த மூக்குத்தூள்.	
வீசை 1-க்கு	3 12 0	புட்டி 1-க்கு	0 4 0
		டஜன் 1-க்கு	2 8 0

சுகானந்த வைத்தியசாலா,

நெ. 26, ஆச்சாரப்பன் வீதி, ஜி. டி. சென்னை.

மேகவர்ண சரிகை புடவைகள்.

புதுரேகம்.

இவை பார்வைக்கு லட்சணமாகவும் மதிப்புக்குத் தகுந்ததாகவும் உறுதியாகவும் செய்யப்பட்டவை. நாகரீக காலத்திற் கேற்ற இவற்றை வாங்கி ஆனந்தங் கொள்ளுங்கள். நாணயமான ஜெர்மன் வெள்ளி நைசான சரிகையும் பட்டுங் கலந்த முகதலையுள்ளவை. ஒவ்வொரு ஸ்திரீக்கும் சந்தோஷத்தை கொடுக்கக் கூடிய அவ்வளவு அழகும் நாணயமும் சகாயமுமுள்ள புடவைகள். இவற்றில் கத்தரிப்பூ, பாடல் கிரீன் (அதாவது ஓர்வித பச்சை நிறம்) வெங்காய வர்ணம், மேகவர்ணம் முதலிய வர்ணங்கள் உண்டு.



நெ. 11. 16-முழம் நீளம் $2\frac{1}{2}$-முழம் அகலம் பட்டு சரிகை கலந்த முந்தானியுள்ள புடவை 1-க்கு ரூபா 6 0 0

நெ. 2. 16-முழம் நீளம் $2\frac{1}{2}$-முழம் அகலம் பட்டுசரிகை கலந்த முந்தானியும சிவப்பு பட்டுக் கறையுமுள்ள கருப்பு சந்திரகளா புடவை 1-க்கு விலை ரூபா 6 4 0

கோட்டடி புடவைகள்

இவற்றில் பலமாதிரி கிடைக்கும்.

நெ 3. 16-முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம் சரிகை முந்தானியுள்ளது புடவை 1-க்கு விலை ரூபா	6	0	0
பந்தர் தவன கொடிசேலை	4	8	0
பொன்னேரி செட்டிசாயசேலை	5	4	0
பந்தர் மாங்காய் சேலை	5	4	0
கொட்டடி சாதா சேலை	6	0	0
ரோஸ்கலர் டோரியா சேலை	7	0	0
சிலேட் கலர் சேலை	7	0	0
கருப்பு சாதா சேலை	7	0	0
கருப்பு கொட்டடி சேலை	6	8	0
வெங்காய கலர் சேலை	8	0	0
பத்தர் டோரியா சேலை	7	0	0

10/48

டோரியா கோட்டடி சரிகை சேலை.

18-முழ நீளம் $2\frac{1}{2}$-முழ அகலம் சேலை	10	0	0
நெ. 2. 16-முழ நீளம் $2\frac{1}{2}$-முழ அகலம் சேலை	8	0	0

மதுரை அழகிய புட்டா சேலை.

சிவப்பில் வெள்ளைப் புள்ளி போட்டது	8	0	0
கருப்பில் வெள்ளைப் புள்ளி போட்டது	8	0	0
ஷை 2-ந்தரம்	6	0	0
அசல் ஜப்பான் பட்டு அங்கவஸ்திரம் 5-முழம் நீளம் $2\frac{1}{2}$-முழம் அகலம்	3	4	0
புதுச்சேரி அசல் பட்டு குட்டைகள் 4-முழம் நீளம் $2\frac{1}{4}$-முழம் அகலம்	6	0	0
5-முழம் நீளம் $2\frac{1}{4}$-முழம் அகலம்	7	0	0
6-முழம் நீளம் $2\frac{1}{4}$ முழம் அகலம்	8	0	0
அசல்பட்டு ஜப்பான்ஜாலர் சவுக்கம் 2-முழம் சதுரம் 1க்கு	2	4	0

பொன்னுசாமி நயினார்,

நெ. 21, பாரிஸ் வெங்கடாசல அய்யர் வீதி, ஜி. டி. சென்னை.

இனும்! இனும்!! இனும்!!!

கையிருப்புக் காப்பி கொஞ்சமே.

1823ஷுத்திய காலண்டர், கேட்லாக், பல பாடற்றிரட்டுப் புத்தகம் இனும் அளிக்கப்படும்.

உடனே உங்கள் விலாசத்தை விவரமாக எழுதினுல், மேற்கண்ட புத்தகம் பெறுவீர்கள்.

மானேஜர்:—

விநோதவிகடன் ஆபீஸ்,

நெ-56-நரசையர் வீதி.

பழையவண்ணுரப் பேட்டை

சென்னை,

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசிலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜூம் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,

தருமசீலன் பிரஸ்,

2 பாலகிருஷ்ணன் சந்து.

ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

இனும்! "கிலாபத்" இனும்!! இனும்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களையும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனுமாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0.

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,

நாச்சியார்கோவில், (தஞ்சை ஜில்லா.)